# கிழக்கொளி

KILAKKOLI

காலாண்டு சஞ்சிகை

ஒளி - 10 (சித்திரை - ஆடி - 2003) கதிர் - 02



கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்சங்க வெளியீடு
Published by : Eastern University Employees Union

# கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்சங்க வெளியீடான 'கிழக்கொளி' சஞ்சிகையின் 10வது ஆண்டு நிறைவினையொட்டி நடாத்தப்படுகின்ற போட்டி II

## கவிதைப் போட்டி

விதிகள்:

01. மேற்படி போட்டி பாடசாலையில் கல்வி கற்கும் 9ம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலே கல்வி கற்கும் மாணவர்களுக்குமாக இரு மட்டங்களிலே நடைபெறும். எனினும் போட்டி விதிகள் பொதுவானவைகளாகும்.
02. கவிதைத் தலைப்பு பின்வரும் விடயங்களில் ஒன்று பற்றி அமையவேண்டும்
    - அ) 'இனிப் பலமுறை இடர்ப்படுவதேர்!...
    - ஆ) 'வழி, எழ அல்லது என்றுமே விழுந்து கிட'!...
    - இ) 'ஒளியைத்தேடி'...
    - ஈ) அழுவதற்கு நேரமில்லை !...
    - உ) நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
    - ஊ) நீ அறிவாயா ?
03. அடி/எல்லை வரையறைக்குரியதன்று
04. பிரதி, கணணி அல்லது தட்டச்சு உருவில் அமைவது விரும்பத்தக்கது.
05. முடிவு திகதி : 31.08.2003
06. அனுப்பவேண்டிய முகவரி :

    பிரதம ஆசிரியர்<br>
    கிழக்கொளி<br>
    விநியோகப் பிரிவு<br>
    கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை<br>
    வந்தாறுமூலை
07. நடுவரின் தீர்ப்பே இறுதியானது
08. முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
09. ஆறுதல் பரிசாக சான்றிதழ்கள் வழங்கப்படும்

பிரதம ஆசிரியர்<br>
கிழக்கொளி<br>
23.06.2003

காலாண்டு சஞ்சிகை

# கிழக்கொளி

சித்திரை - ஆடி

(கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்சங்க வெளியீடு)

*பிரதம ஆசிரியர்*

திரு. வீ. பிரகாஷ்

*துணை ஆசிரியர்*

திரு. ம. சதீஷ்

*சஞ்சிகைக் குழு*

திரு. மா. அமிர்தலிங்கம்

திரு. ஏ. எப். ஏ. சின்னலெவ்வை

திரு. ஏ. ஜெகராஜூ

திரு. க. தேவராஜா

திரு. ச. ரெட்ணராஜ்

20/=

*தொடர்புகள் :*

கிழக்கொளி

விநியோகப் பிரிவு

கிழக்குப் பல்கலைக்கழகம்

வந்தாறுமூலை

செங்கலடி

மின்னஞ்சல்: Kilakkoli2002@Yahoo.com

இணையம்: www.esn.ac.lk/journal/kilakkoli

உள்ளே......


| விடயம் | பக்கம் |
|---|---|
| *ஆசிரியர்* | |
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| கிழக்கத்தியான் பதில்கள் | 11 |
| கிழக்கொளி செய்திகள் | 22 |
| *ஆய்வுக் கட்டுரைகள்* | |
| ஈழத்து வாசகர்கள் | 03 |
| இலங்கைத் தேசிய நூலகம் | 15 |
| *கவிதைகள்* | |
| தைத்திங்களோடு.. | 06 |
| கனதியான கவிதை | 08 |
| *கதை* | |
| கா(த்)தல் ஏமாற்றம் | 09 |
| *கட்டுரைகள்* | |
| நிருவாகக் கட்டமைப்பு | 12 |
| பெண்களுக்கான பிரசவகால. | 17 |
| பிரமுகர் பக்கம்(நேர்காணல்) | 20 |
| உலகக் கிண்ணம் -2003 | 23 |
| உலக பொலிஸ்காரனும்.... | 26 |
| பல்கலைக்கழக சீர்திருத்தம் | 29 |
| கணனி | 31 |
| ஆய்வு | 33 |
| பண்டையகால மட்டக்களப்பில். | 37 |
| குறுக்கெழுத்துப் போட்டி | 25 |
| குறுக்கெழுத்துப்போட்டி முடிவு | 40 |


இழைத்தநாள் எல்லை இகவா; பிழைத்தொரீ இக்
கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை; - ஆற்றப்
பெரும் பொருள் வைத்தீர் வழங்குமின்; நாளைத்
தழீஇம் தழீஇம் தண்ணம்படும்.

*- நாலடியார்*

பொருள் : உடலோடு கூடி வாழ அளவு செய்துள்ள நாள்கள் தம் அளவைக் கடவா அந்த அளவில் தவறி நீங்கி, கூற்றுவனிடத்தினின்றும் அப்புறப்படுத்தப்பட்டு உயிர் பிழைத்திருப்பவர் இவ்வுலகத்தில் இல்லை. நாளையொருகால் சாவுப்பறை தழீஇம் தழீஇம் என்று ஒலிக்கும். ஆதலால், பெருமையைத் தருவதாகிய பொருளை மிகுதியாக வைத்துள்ள செல்வந்தரே! உடனே அப்பொருளைப் பிறர்க்கு உதவுங்கள்.

க-து :- குறித்த ஆயுளுக்கு மேல் யாரும் உயிர் வாழ்தல் கூடாமையின், உடனே அறஞ்செய்து நலம் பெறுதல் வேண்டும்.

## வணக்கம்

எமது பல்கலைக்கழகம் தொடங்கிய காலம் முதற்கொண்டு இற்றைவரையான புள்ளிவிபரங்களை நோக்கும்போது இது வழக்குகளை சந்திக்க நீதிமன்றப்படிகளை அளவுக்கதிகமாகவே மிதித்துள்ளதை அவதானிக்கலாம். நிருவாக, கல்விசார், கல்விசாரா நியமனங்கள் மற்றும் தனிப்பட்ட பழிவாங்கல்கள் நிமித்தம் தொடரப்பட்ட அநேக வழக்குகளில் நிருவாகம் தோற்றுப்போயுள்ளதுடன் இதன்மூலம் ஏகப்பட்ட பல்கலைக்கழக நிதியையும் இழந்து பல்கலைக்கழகம் அதன் அபிவிருத்தியில் பெரும்பின்னடைவையும் கண்டுள்ளது. சில வழக்குகளின் தீர்ப்புகளின்பிரகாரம் பலர் (ஆசிரியர்கள்) பல்கலைக்கழகத்துக்குள் காலடிவைக்காமலே முழுச்சம்பளம் பெற்றுக்கொண்டிருப்பதும் இன்னும் சிலர் பெருந்தொகைப் பணத்தை நஷ்டஈடாகப்பெற்றுவிட்டு வெளிநாடுகள் சென்றனுபவிக்கும் விசித்திரங்களும் இங்கே இடம்பெற்று வருவது சகலரும் அறிந்ததே! அதேவேளை, சொந்த விருப்புவெறுப்பு தனிப்பட்ட செல்வாக்குகளுக்கேற்ப நியமனங்கள் வழங்கப்படுவதும், பரீட்சை வினாத்தாட்கள் திருத்தப்படுவதில் நம்பகத்தன்மை குறைந்துவருவதும் இவ்வுயர்கல்விநிறுவனத்தின் மீது பலரும்கொண்டுள்ள சந்தேகங்களை மேலும் வலுப்படுத்துவதாக அமையலாம். இந்நிகழ்வுகள் தொடர்வது எமது பல்கலைக்கழகத்தையும் அதன் நிருவாகத்தினையும்பற்றி மிகமோசமானதொரு எண்ணக்கருவை மற்றவர்களிடத்தில் தோற்றுவித்து விடுகின்றது. இது இப்பல்கலைக்கழகத்தின் பெயருக்கு இழுக்கை ஏற்படுத்துவது மட்டுமல்ல வரலாற்றில் அவப்பெயரையும் ஏற்படுத்திவிடும் என்பதையும் நாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு வினயமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆகவே எல்லாரையும் அனுசரித்து திறமைகளுக்கும் அனுபவத்துக்கும் நல்ல வாய்ப்பளித்து, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நியமனங்களை வழங்கும்போது நிச்சயம் இவ்வாறான அநாவசியமான செலவுகளும் அசௌகரியங்களும் எமது பல்கலைக்கழகத்துக்கு ஏற்படாமல் தவிர்த்துக்கொள்ளலாம். அதே போன்று பிழையானவகையில் செய்யப்படுகின்ற நியமனங்களினாலும், எடுக்கின்ற முடிவுகளினாலும் ஏற்படுகின்ற சகல பின்விளைவுகளுக்கும, செலவுகளுக்கும் அந்தந்த அதிகாரிகளே பொறுப்பேற்கவேண்டிய நியதியையும் நிருவாகம் மிக இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும். அதேவேளை இந்நிருவாகம், அனைவரையும் அரவணைத்து, திருப்திப்படுத்தி செல்கின்ற மனப்பக்குவத்தையும்கொண்டு செயற்படுமேயானால் அனைவருமே அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் கடமைபுரிய முன்வருவர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

*மறுமலரில் சந்திப்போம்.*

பிரதம ஆசிரியர்
01.07.2003

# இருபதாம் நூற்றாண்டு முடிவில் ஈழத்து வாசகர்கள்

- கலாநிதி. செ. யோகராசா

இருபதாம் நூற்றாண்டு முடிந்துள்ள இத்தறுவாயில் ஈழத்து வாசகரது நிலைபற்றிச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானதே. பலரும் இவ்வாறான வாசிப்பு விடயத்தை புள்ளிவிபரங்களுடன் அணுகவே முற்படுவர். மாறாக, இக்கட்டுரையாளரது அவதானிப்பினை அடிப்படையாகக் கொண்டும், வாசகரை வகைப்படுத்தி அவ்வடிப்படையிலும் இங்கு இம்முயற்சி இடம்பெறுகின்றது.

இவ்வாறு வாசகரை வகைப்படுத்தலும் பலவாறு அமையலாம்.

முதலில் (அ) காத்திரமான (Serious) நோக்குடைய வாசகர்கள்
(ஆ) பொழுதுபோக்கு நோக்குடைய வாசகர்கள்
என்றவாறு நோக்குவோம்.

ஈழத்தினைப் பொறுத்தவரையில் காத்திரமான நோக்குடைய வாசகர்களையும் நுணுகி நோக்கும் போது
(1) தேடல் தாகத்துடன் இடையறாது வாசிப்போர்
(2) தேடல் தாகத்துடன் அவ்வப்போது வாசிப்போர்
என்று இருவகைப்படுத்தலாம்.

இவர்களுள் முதற்பிரிவினர் ஈழத்தில் மிகச் சிலராகவேயுள்ளனர். மற்றைய பிரிவினர் கணிசமான தொகையினர். இவர்கள் கவனமாக நோக்கப்படவேண்டியவர்கள். குறிப்பிட்ட நிலைக்கு மேல் வளராத ஈழத்து எழுத்தாளர்கள், விமர்சகர்கள், ஆய்வாளர்கள் முதலானோரைப் போற்றிப் பாராட்டி வருபவர்களாக இவர்கள் உள்ளனர். இதன் விளைவுகளிலொன்று, ஈழத்து நவீன இலக்கிய முயற்சிகள் குறிப்பிட்ட நிலைக்கு மேல் வளராத நிலையில் காணப்படுவதாகும்.

பொழுதுபோக்கு நோக்குடைய வாசகர்களே ஈழத்தில் கணிசமானவர்கள். இவ்வாறிருந்தும் ஈழத்திலே பொழுதுபோக்கு நோக்குடைய எழுத்தாளர்கள் தொகை குறைவு. காரணம், குறிப்பிட்ட இவ் வாசகர்கள், தமிழ்நாட்டுப் பொழுதுபோக்கு படைப்புகளினால் ஆகர்ஷிக்கப்பட்டிருப்பதும் அத்தகைய 'தரத்திற்கு' ஈழத்து பொழுதுபோக்கு எழுத்தாளர்களால் எழுதமுடியாமலிருப்பதுமேயாகும்.

இனி,இன்னொருவிதத்திலும் ஈழத்து வாசகர்களை வகைப்படுத்த முடியும்.
(அ) எழுத்தாளராக உள்ள வாசகர்கள் (அதாவது எழுத்தாளரது வாசிப்பு நிலமை)
(ஆ)உயர்கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களாகவுள்ள வாசகர்கள்
(இ) பெண் வாசகர்கள்
(ஈ) கிராமப்புற வாசகர்கள்
என்றவாறு வகைப்படுத்துவதே அதுவாகும்.

எழுத்தாளராக உள்ள ஈழத்து வாசகர்கள் பற்றி. அதாவது ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களின் வாசிப்புநிலை பற்றி நோக்கும்போது இலக்கிய ஆர்வலர்களுக்கு விசனமே ஏற்பட வாய்ப்பாயுள்ளது. இத்தகைய ஈழத்து எழுத்தாளருள் பெரும்பாலானோர் குறிப்பிட்ட எழுத்தாளர்களது நூல்களை மட்டும் (எ-டு: மு.வ, அகிலன், காண்டேகர், அண்ணாத்துரை) அதுவும் தமது ஆரம்ப நிலையில் வாசித்தவர்களாகவே உள்ளனர். தமது சமகால எழுத்தாளர்கள் பற்றி பெயரளவிலேயே அறிந்தவர்களாகவுள்ளனர். எனவேதான், ஈழத்தில் நாவல் வளர்ச்சி ஆரம்ப நிலையில் காணப்படுகின்றது.; சிறுகதை வளர்ச்சி தேக்கமுற்றதாக விளங்குகின்றது. மறுபுறம், ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் எவர்களோ அவர்கள் (எ-டு: உமா வரதராஜன்) காத்திரமான வாசிப்பாளர்களாக விளங்குவது யாமறிந்ததே.

உயர்கல்வி நிறுவனங்களிலே (பல்கலைக்கழகம், அரசினர் ஆசிரியர் கல்லூரி, கல்வியல் கல்லூரி) பணிபுரியும் ஆசிரியர்கள் தங்கள் தொழில் நிமித்தம் தொடர்ந்து வாசிக்க வேண்டிய நிலையிலுள்ளவர்கள். ஆயினும் இவர்களுள் கணிசமானோரும் தாங்கள் கற்ற காலத்தின் பின்னர் வாசிப்புத் தொழிலை மறந்தவர்களாகவிருப்பது கண்கூடு, (உதாரணமாக, தமிழ் இலக்கிய வரலாறு கற்பிப்போர், இப்போதும் பேராசிரியர் வி.செல்வநாயகம் ஐம்பதுகளளவில் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு பற்றியே அறிந்துள்ளனர்). ஈழத்தில் ஆய்வுச் சஞ்சிகைகள் நீண்ட ஆயுளைப் பெறமுடியாதுள்ளமையின் தாற்பரியமும் இதுதான். மற்றொருபுறம் ஆசிரியர்களது இத்தகைய நிலமை காரணமாக கல்வித்தரம் பின்தங்கிப்போவதும் மாணவர்களுங்கூட குருவழியில் செல்வர்களாக காட்சிதருவதும் நிகழ்கின்றன. உயர் கல்வி நிறுவனங்களிலே நல்லகுருநாதர்களும் இருக்கவே செய்கின்றனர். அத்தகையோர் வழிச்செல்லும் மாணவர்களுள் கணிசமானோரும் தமது நிறுவனத்தை விட்டுவிலகியபின்னர், வாசிப்புலகிலிருந்து விலகிவிடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமையுமுள்ளது.

பெண் எழுத்தாளர்கள் பற்றி நோக்குவோமாயின் ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் பலரிருந்தும் குறிப்பிடத்தக்கோர் மிகச்சிலராகவே உள்ளனர். இதற்கான முக்கிய காரணங்களுளொன்று இவர்களது வாசிப்பு நாட்டம் பல காரணங்களால் (எ-டு: வேலைப்பளு, வீட்டுச்சூழல்) விருத்தியடையாமையேயாம்.

ஈழத்தின் கிராமப்புறங்களிலுள்ள வாசகர்களது அறிவுவிருத்தியில் வானொலி போன்ற ஊடகங்களே கணிசமான செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. இதனாலேயே, இன்றும் கிராமப்புற எழுத்தாளர்களின் இலக்கியத் தேடல் வானொலி நடத்தும் 'இசையும் கதையும்' முதலியவற்றின் ஊடாக 'வளர்கின்ற' பரிதாபநிலை நிலவுகின்றது.

தவிர, எண்பதுகள் தொடக்கம் அதிகரித்துவந்த போர்க்கால நிலமைகள் எமது வாசகரது வாசிப்பு வேகத்தை - தாகத்தை - மேன்மேலும் குன்றச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. உண்மையான தேடலுடைய

வாசகர்களும் எழுத்தாளர்களும் கூட இதனால் பாதிப்புற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர். தொண்ணூறுகளுக்குப் பிற்பட்ட நவீன இலக்கிய வளர்ச்சி, யாழ்ப்பாணப் பிரதேசத்தில், ஒப்பு நோக்கில் பின்னடைவு கண்டுள்ளமை இதனாலேயாம்.

எவ்வாறாயினும், மேற்கூறிய பல்வகைப்பட்ட வாசகர்கள் அனைவரும் இறுதியில் ஓரிடத்தில் சங்கமமாகின்றனர். அதுதான் நூல்கள் வாங்குவதிலே காட்டும் அலட்சிய நிலமை! உதாரணமாக, மட்டக்களப்பு நகரிலே, தரமான எழுத்தாளர்கள் 20 பேர் இருப்பார்கள் என்பதிலே ஐயமில்லை: ஆயின், மட்டக்களப்பில் உள்ள புத்தக நிலையமொன்றிற்கு விற்பனைக்கு வரும் 'தாமரை' சஞ்சிகை பதினைந்தில் ஆறு, ஏழே விற்பனையாகின்றன! (எனினும் தாமரை பிரதி ஒன்றின் விலை ரூ.15). ஈழத்திலே சிறுசஞ்சிகைகள் அற்பஆயுளிலே மடிவதற்கான முக்கிய காரணமும் இதுவே.

பரவாயில்லை. புத்தகங்களை விலை கொடுத்து வாங்குவது வாசகர்களுக்கு கஷ்டமாகவிருக்கின்றது என்று கருதிக்கொண்டாலுங்கூட, வாசகர்களுள் கணிசமானோர் பொது நூலகங்களுக்கு சென்றாவது வாசிக்கின்றார்களா என்றால் அதுவும் அதிருப்திதருமொன்றே! பெரும்பாலான நூலகங்களிலுள்ள தரமான - புதிய - நூல்கள் கசங்காத நிலையில்-பின்புறத்திலுள்ள 'நூல் இரவல் கொடுப்பனவு' த்தாளில் திகதி முத்திரை ஒருபோதுமே அடிக்கப்படாத நிலையில் - உள்ளமையே ஊரறிந்த ரகசியமாம்.!

## *10வது பதிப்பாண்டு*

கிழக்கொளி தனது 10வது பதிப்பாண்டில் வீறுநடை பயின்று கொண்டிருக்கின்றது என்பதை பெருமையுடன் பறைசாற்றிக் கொள்கின்றது. அடுத்த வெளியீடானது 10வது ஆண்டு சிறப்பு மலராக வெளிவரும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்வதுடன் சிறுகதை, கவிதைப் போட்டிகளும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம். விபரங்கள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன.

- *பிரதம ஆசிரியர்*

மேதையாக ஆசை
ஒளி கொடுக்குமா
உயிரிழந்த தெருவிளக்கு?

*கண்ணா*

## தைத்திங்க ளோடுவந்த சமாதானம் வெல்லட்டும் !

இருபத்து ஆண்டுகளாய் என்ன செய்து கொண்டிருந்தோம் ?
இலங்கையினை இரண்டாக்கும் ஏற்பாடு தான் செய்தோம்?
உருவத்தில் சிறிதான உயிர் நாட்டைச் சீரழிக்கும்
ஊத்தை இனவாத ஊற்றுக்குள் மூழ்கடித்தோம்!
பருவத்து இளையவரை மக்களினைப்பந்தாடிப்
பச்சைரத்த வெள்ளத்தைப்பாய்ந்தோடப்பண்ணிவிட்டோம்!
தருமத்தைத்தான் மறந்து தவறுதலாய் நடந்திட்டோம்
சண்டையினால் நாட்டைத்தான் சவக்காலை ஆக்கிவிட்டோம்!

சீதையினை இராவணனார் சிறைவைத்த பாவமிதோ?
ஸ்ரீராமன் மனம்நொந்து திருஷ்டித்த சாபமிதோ?
தாதையினை மகன்கொன்ற சரிதத்தின் சாபமிதோ?
தங்கையினைப் பெண்கொண்ட தமையன்செய் பாவமிதோ?
கோதையர்கள் கற்புநெறி குலைந்திட்ட காரணமோ?
கோவிலிலே பூசாரி கொலைசெய்த காரணமோ?
பாதைமாறி நாமெல்லாம் பன்றிகளாய் அலைவதுமேன்?
பகையுடனே வாழ்வதுமேன்? பாம்புகள்போல் சீறுவதேன்?

அரசியலை வைத்தே ஆடியசூதாட்டத்தால்
ஆட்சியினர் பிழைக்க நாட்டை அடகுவைத்த காரணத்தால்
இரகசியக் காரியங்கள் இருளோடு செய்ததனால்
இங்கே தலைகாட்டி அங்கே வால் காட்டியதால்
பரகசியமான பின்பும் பழைய தரித்திரத்தை
பல்லவியாய்ப்பாடும் பட்டணத்து நரிகளினால்
உரசிவிட்டு வேடிக்கை பார்க்கும் உன் மதத்தால்
ஊர்தான் அழியும்! ஒன்றும் இனி மிஞ்சாது!

என்றெண்ணிச் சமாதான ஏணியிலே கால்வைத்து
ஏறிக்கொண்டிருக்கின்றார் எரிக்சொல்ஹெய்ம் முயற்சியினால்
சென்று போன தைத்திங்கள் திருநாளின் பலனாக
திட்டமிட்ட போர்நிறுத்தம் செயலாகிக்கொண்டிருக்க
நன்றுநன்று என்றுலகம் நாவாரப் புகழ்ந்துரைக்க
நாட்டினிலே பேரமைதி நடைபோட்டுச் செல்கின்றது?
குன்றுஎன நிதியுதவி குவியத்தான் போகின்றது!
குட்டிநாடு இலங்கை இனிக்குபேரபூமி ஆகத்தான்போகின்றது!
அமைதி காணும் வழியறியா அந்தகர்கள் அதைக்கண்டு
அலறி, சமாதான அன்புவழிதனை அடைக்க
எவையெவையோ செய்து ஏலுமட்டும் பார்க்கின்றார்!
எப்படியோ போர்மூண்டு இலங்கை எரிந்தால்தான்
இவர்களுக்கு எல்லாம் பிழைப்பிருக்கும் என்பதால்
இஞ்சிதின்ற குரங்கு போல் இடுவம்பு பண்ணுகிறார்!
குவையாகத்தான் நிதியைக் கொள்ளையிட்ட பேர்வழிகள்
குப்புறவே விழவைத்துக் கொண்டது இச்சமாதானம்!

ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் பேரணிகள் கடையடைப்பு
ஆள் கடத்தல் கொலைகூட அனுதினமும் நடக்கிறது!
கூப்பாடு போட்டு நாடாளு மன்றத்தில் குமுறுகிறார்
குறைகாண வென்றேதான் கூட்டங்கள் போடுகிறார்!
சாப்பாடு போட்டும் இச்சனிகளுக்குத் திருப்தியிலை!
சண்டையிலே தோற்றாலும் சப்பைவாய் காட்டுகிறார்!
காப்பாற்ற இயலாது கைவிட்ட நாட்டினையே
கைதூக்கி விடவந்தார் கைவெட்டப் பார்க்கின்றார்!

எத்தடைகள் வந்தாலும் எதிர்த்து அதை உடைத்தெறிந்து
இரும்பன்ன உறுதியுடன் எவ்வழியில் செல்வோமெனச்
சத்தியத்தின் துணையுடனே இருதரப்புத் தலைவர்களும்
சறுக்காமல் சளைக்காமல் முன்னேறத் தவழ்கின்றார்!
முத்தனைய தாய்லாந்தில் நோர்வேயில் முடிவெடுத்த
முன்னேற்ற கரமான அணுகுமுறை முழுவதையும்
உத்தமமாய்ச் சமாதானம் உருவாகக் காரணமாய்
உற்பவிக்கச் செய்கின்றார்! உண்டு வெற்றி என்கின்றார்!

உலகாளும் அமெரிக்கா ஊடுருவப் பார்த்திருக்க
உன்னிப்பாய் இந்தியனும் ஓரக் கண் காணிக்க,
பலகாலும் தோற்றுவிட்ட பாணியிலே பேசாமல்
பவ்வியமாய் படிமுறையாய் பலதையுமே சிந்தித்து
கலகத்தின் காரணத்தைக் கண்டறிந்து அது இனிமேல்
கடுகளவும் தோன்றாது இருக்கவழி சமஷ்டிமுறை
நிலவிடுதல் வேண்டுமென நினைப்பு இப்போ வந்ததனால்
நிம்மதியாய் வீட்டினிலே நித்திரையும் செய்கின்றோம்!

தனைத்தானே நிர்ணயிக்கும் சரியான ஏற்பாடு
சமாதானம் வழங்குகிற சட்டங்கள் உருவாக்கம்
நினைத்ததனை எழுதிடவும் பேசிடவும் வகைசெய்யும்
நிலையான கட்டளைகள் நிறுவுதலும் அதிலொன்று!
அனைத்தினமும் சம உரிமை அனுபவிக்க அதிகாரம்
அவரவரின் பண்பாட்டை அனுமதிக்கும் யோசனைகள்
மனதினிலே இனவாத மதம் ஒழிந்து போனால்தான்
மாறாத சமாதானம் மலருமிந்த நாட்டினிலே!

தைத்திங்களோடு வந்த சமாதானம் வெல்லுதற்கு
சகலருமே பிரார்த்திக்க! சலியாது உழைத்திடுக!
வைத்தியங்கள் செய்தே வரலாற்றின் நோய் தணிக்க
வந்துள்ள நோர்வேயை மனதார வாழ்த்திடுக!
பைத்தியங்கள் போலப் பதவிகளில் இருந்து வசை
பாடித்திரிபவர்கள் பைய அப்பால் சென்றிடுக!
மெய்த்தவர்கள் வாழ்ந்த மேன்மைமிகு இலங்கையினை
மீளப்புனரமைக்க வேண்டியது எம் கடமை!

அக்கரைச்சக்தி
11-12-2002

## கனதியான கவிதை

- ஓட்டமாவடி,நளீம்

கனகாலமாய்
கவிதை யொன்று
கனத்து முனகி மூச்சிரைத்து
கருவுற்றது என்னுள்...

வாழ்தலில் உயிரில் வீசிடும்
விஷப் புயல் பற்றியா
விடிவு தேடும் விலாசம் பற்றியா
விடிந்தால் போதும் உயிர்
உயிர்ப்பு வேண்டும் யுகம் பற்றியா ??
அல்லது
தூக்கனாங் குருவிக் கூண்டை
துவம்சம் செய்து தூக்கியெறிந்த
துரோகம் பற்றியா ?
முகவரியறிந்து
உருமாறிப் போகும்
உலகம் பற்றியா ...?
அதுவொரு காரமான
கவிதை போலும்!

கவிதையை காண்பதற்குள்
காலமகள் கிழவியாகியிருந்தாள்

அன்றொரு நாள்
கவிதை வெளியேறி
விம்மித்தான் போயிற்று ...
வியப்புற்று... விசாரித்தேன், விசனித்தது
புளூற்றோவுக்குப் போவதாய் போனது
மனிதனில்லாத மண்ணுக்கென்றது
கவிதைக்கும் உயிர்ப்பிருப்பது
அன்று தான்
இலக்கியத்திற்கு தெரிந்திருக்கும்
போலும்!

## தீர்வு காணப்படவேண்டிய நீண்டநாள் பிரச்சனை.

எமது பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடிடத் தொகுதிக்கு (New complex) வினியோகமாகின்ற குடிநீரில் ஒருவகைப் புழு காணப்படுவது கிட்டத்தட்ட 1998ம் ஆண்டிலிருந்து மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுவருகின்ற முக்கியமான பிரச்சினையாகும். இக்குறை நீண்டகாலமாகவே தீர்க்கப்படாதிருப்பது பலரது விமர்சனத்துக்கும் உள்ளாகியுள்ளது. நிருவாகமும் பலவகையில் முயன்றும் அது நிறைவேறவில்லை. இப்பல்கலைக்கழகத்திலுள்ள பல்வேறு துறைகளிலும் பாண்டித்தியமும் அறிவும் நிறைந்த கல்விமான்கள் இவ்வாறான பொதுப் பிரச்சினைக்கு காத்திரமான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்குதல் வரவேற்கத்தக்கதாகும். வெறுமனே வேடிக்கை பார்ப்பதை விட பங்களிப்பை வழங்குவதுடன், இது நமது, நம் பிள்ளைகள் கற்குமிடம் என்ற சிந்தனையுடனும் செயல்படுவோமாயின் நம்மத்தியில் தீர்க்கப்படமுடியாத பிரச்சினை என்றசொல்லுக்கே இடமிருக்காது.

## மனம் வருந்துகின்றோம் ....

கடந்த தை - பங்குனி 2003 இதழில் ஒரு சில சஞ்சிகைகளில் பக்கங்கள் அச்சுப்படாமலும், சில புத்தகங்கள் சரியான முறையில் கோர்க்கப்படாமலும் இருந்ததையிட்டு **'கிழக்கொளி'**, வாசகர் நெஞ்சங்களிடம் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றது.

*- பிரதம ஆசிரியர்.*

## கா(த்)தல் ஏமாற்றம்

- சுச்சுமணி -

மார்கழிக் குளிரையும் பொருட்படுத்தாது கடிகாரம் மணி ஏழைக் காட்டிக்கொண்டிருக்கையில் காலைப் பொழுதின் இனிமையை இலவசமாக இரசித்தவண்ணம் கல்முனைப் பேரூந்துத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வவுனியாப் பேரூந்தில் ஏறிய மணிஷா அவள் நண்பிகளிடம் தன் காதலரும் சில வேளைகளில் எம்முடன் வருவார் என்று கூறிவிட்டாள். பஸ் புறப்பட்டு சென்றுகொண்டிருக்கையில் வழியில் உள்ள தன் காதலரின் ஊர் நெருங்க நெருங்க அவள் ஆவலும் அதிகரிக்க தொடங்கி விட்டது. அவளுடன் அவள் நண்பிகள் நால்வர். இருவர் பாதையின் ஒரு புறம் இருவர் மறுபுறமாக பார்வையை ஓடவிட்டிருந்தார்கள். நண்பியின் காதலர் தென்படுகிறாரா என்பதை அறிந்து கொள்வதற்காக. காதலன் வீட்டுக்குச் செல்லும் உபவீதிச் சந்தியில் உள்ள கோயிலின் முன் பஸ்வண்டி தரித்ததும் ஆவலுடன் வாசலை நோக்கியவளுக்கு (அவள்)காதலன் ஏமாற்றத்தைத்தவிர வேறெதையும் பரிசாக்கவில்லை. அவள் தோழிகளும் அவளைப் பார்த்து கை விரித்து விட்டாலும், மட்டக்களப்பில் இருந்து புறப்படும் வவுனியா பேரூந்தில் வருவாரோ? என்ற எதிர்பார்ப்பையும் வழியில் இருந்த 'Check Point' இல் காணப்பட்ட அப்பேருந்தில் அவளவன் தென்படாதது மறையச்செய்தது.

பஸ் ஓட ஓட தன் காதலனை விட்டு தான் பிரியும் தூரம் அதிகரித்துக் கொண்டிருப்பதை உணர்ந்த அவள் மனமோ 'உன் உயிரை தனியே விட்டுவிட்டு, உனக்கு இந்தப் பயணம் தேவைதானா' என்று வினா தொடுத்துக்கொண்டிருந்தது, இடையிலேயே திரும்பிவிடலாம் போல் இருந்தது. வழியில் அருகில் இருந்த குண்டுத்தோழிக்கு (பேரூந்தின் குலுக்கல் காரணமாக) வாந்தி வந்து விட்டது. அவள் முதுகைத் தடவி அவளை தன் மடியில் படுக்கவைத்துக்கொண்டாள். தன் காதலனை நினைத்துக் கொண்டு செய்ததாலோ என்னமோ அவளுக்கு சுமை சுகமாகத்தான் தெரிந்தது. எப்படி அவள் பாரத்தைத் தாங்கினாளோ தெரியாது. அவ்வளவு தூரமும் அவள் தன்மடியில் படுத்திருந்த உணர்வே இருக்கவில்லை. ஒருவாறாக பி.ப 4.00 மணிக்கு வவனியாவுக்கு போய்ச் சேர்ந்து தாங்கள் தங்க வேண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்கு வந்துசேர்ந்தனர். அங்கிருந்த ஒரே 'வாத்ரூமுக்குள்' மூவர் ஒரே நேரத்தில் நுழைந்து குளியலை முடித்தனர். உடை மாற்றும் போது தன்னையும் அறியாமல் சிரித்த மணிஷாவிடம் நண்பியொருத்தி கேட்ட காரணத்த்திற்கு மௌனத்தால் பதில் சொன்னாலும் அவள் 'நீயும் உன் காதலனும் மட்டும் இங்கு இருந்தால் எப்படியிருக்கும் என்றா எண்ணிப்பார்த்தாய்?' என்று தன் மனதை படம்பிடித்து விட்ட கெட்டித்தனத்தை எண்ணி வியந்தாள். பிரயாணக்களை தீர்ந்தபின்னர் கோயிலுக்குப் போக வெளிக்கிட்ட நண்பியுடன் அருகிலிருந்த கோவிலுக்கு கூந்தலிலிருந்து நீர் வடிந்து கொண்டிருக்கையில் மெல்ல நடைபயின்றாள்.

அது ஓர் பிள்ளையார் கோயில். செருப்பிடம் தற்காலிகமாக விடை பெற்றுவிட்டு கால்களைக் கழுவிக்கொண்டு கோயிலுக்குள் தன் தோழியின் பின்னாலேயே சென்றாள். முதல் முதலில் (தான் 24 வருடங்களாக வழிபட்ட ஆண்டவரை விடுத்து) கோயிலுக்குச் சென்று என்ன கேட்கின்றோமோ அது நிறைவேறும் என்ற நம்பிக்கைக்கிணங்க தன் காதலனுக்காக வரங்கேட்டாள். பின் கோவிலை வலம் வந்து சந்தனம்

வைத்துக்கொண்டு காதலனை நினைந்து குங்குமும் பூவும் வைத்துக் கொண்டு காணிக்கை செலுத்தி விட்டு வெளியேறினாள்.

விடுதிக்கு வந்ததும் மற்றைய மூவரும் அவளை மேலிருந்து கீழாக பார்த்துவிட்டு அசல் சைவப்பழம் மாதிரியே இருக்கிறாயடி என்றதும் அவள் முகம் நாணத்தால் சிவந்தது. அன்றைய பொழுது விடிந்தும், திருமணத்திற்கு செல்வதற்கு தங்களை அலங்கரித்துக் கொண்ட போது அவள் தோழிகள் 'இப்போது உன் காதலன் உன்னைக் கண்டால் உன்னை அப்படியே .........' என்று அவள் காதில் கிசுகிசுத்தார்கள். பின் மணப்பெண்ணுடன் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கோயிலுக்குப் சென்றனர். அவள் மாற்றத்தைக் கண்டு அவள் நண்பிகள் வியந்தனர். பட்டுடுத்தி, (குங்கும)பொட்டு வைத்து, தலை நிறைய கனகாம்பரம் சூடி, ஆபரணங்களுடன் கோயிலை வலம்வந்ததைக் கண்டவர்கள் அவள் இந்துப் பெண்ணல்ல என்பதை ஏற்க மறுத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வலங்காரங்களுடன் தன் காதலனை கணவனாக அடைந்து அவர் பின்னால் கோயிலை வலம் வரவேண்டும் என்று பிள்ளையாரிடன் பலமாக மன்றாடி விண்ணப்பித்துக் கொண்டு அவளுக்கு நிகழப்போகும் இந்து முறைக் கல்யாணத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மணவறைக்கு முன் இருந்த முதல் பாயில் அமர்ந்து கொண்டாள். ஆரம்பம் முதல் இறுதிவரை கிரியைகளைப் பார்த்தவளுக்கு நடைமுறைகள் கஷ்டமாகத்தான் தென்பட்டது. இதற்கிடையில் வேறு இரு ஜோடிகளுக்கும் அங்கு திருமணம் நிகழ்ந்தது, மஞ்சள் கயிற்றில் பூசகர் தாலியைக் கோர்த்துக் கொடுக்க மணமகன் பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டார், பின்னர் மணமக்கள் பூசகரிடம் ஆசி பெற்றுக்கொண்டு சென்றனர். தனக்குப் பிடித்த இம் முறையை தன் காதலனிடம் சிபார்சு செய்து நடைமுறைப்படுத்தலாம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் அன்றையப் பகல்பொழுதைக் கழித்தாள். நள்ளிரவு 2.00 மணியளவில் அவளருகில் (ஒரே கட்டிலில்) உறங்கிக் கொண்டிருந்த சிந்துவுக்கு திடீரென ஏற்பட்ட வயிற்றுவலிக்கு மருந்தை கொடுத்துவிட்டு அவளை அணைத்துக் கொண்டு படுத்திருக்கையில் ஒரு கணம் அவளிடத்தில் தன் காதலன் இருப்பது போன்று தோன்றிய உணர்வை அக்கணத்தில் சிந்தி விட்ட கண்ணீர் சுயநினைவுக்குக் கொண்டுவர தன் கையை அவளிடமிருந்து விடுவித்துக் கொண்டு நீண்ட பெருமூச்சுடன் மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

விடிந்ததும் மணிஷாவிற்கு ஏற்பட்ட குதூகலத்தை விவரிப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. தன்னுயிரைக் காணப்போகிறோம் என்ற ஆவலில் வெகுவிரைவாகவே பிரயாணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டாள். பஸ் தன் காதலனின் ஊரைத் தாண்டிக்கொண்டிருக்கும் போது அவனை வீதியோரங்களில் தேடியதற்கு பலன் கிட்டவில்லை. வீடுவந்ததும் அம்மாவிடம் முகத்தைக் காட்டிவிட்டு அவசரமாக தன்னறையினுள் நுழைந்தாள். இம்முறை காதலனின் கையெழுத்திடப்பட்ட காகிதஉறை அவளை ஏமாற்றாது காத்துக் கொண்டிருந்தது. அவள் பிரயாணக்களை எங்கு சென்றதென்றே தெரியவில்லை. கடிதத்தில் மூழ்கியவள் மீளும்போது நான்குநாள் தொடர்ந்து பிரயாணம் பண்ணியது போன்ற சோர்வை உணரும் அளவுக்கு அவள் காதலனின் கடிதம் அவளை பாதித்திருந்தது. மறுநாள் காதலனை சந்திக்கும் போது இருக்கப்போகும் நிலைமையை யோசித்தவாறு உணவை மறந்து கண்ணீருடன் பஞ்சணையில் தஞ்சம் புகுந்தாள்.

# கேட்டதும் கொடுப்பவனே!

– கிழக்கத்தியான் பதில்கள்

கேள்வி: நம் நாட்டுத் தலைவியின் அன்புத் தம்பி அடிக்கடி போடும் "தக்கதிமித் தோம்" பற்றி என்ன நினைக்கிறீர்?
*(திருமதி.தா.அண்ணலெட்சுமி,நாவற்குடா)*

*பதில்: நம்நாட்டு சுப்பிரமணியசாமியைப் பற்றியா கேட்கிறீங்க. அவருடைய ஆட்டத்துக்கு அ வருடைய அரங்கமே ஆட்டம்காணாமல் இருந்தால் போதும டா சாமி என்று சீனியர் சுதந்திர க. காரங்க தமக்குள்ளே பேசிக்கிறாங் களாம்!*

கேள்வி: நயினா! நாட்டுநடப்பு போறபோக்கப் பாத்தா அவ்வளவு குணமாப்ப டலயே?
*(கி. ரமேசன், களுதாவளை)*

*பதில்: எல்லாப்பேருமாச் சேந்துமறு காலும் முதுகுல "டின்" கட்ட வெப்பானுகள் போலத் தான் கிடக்கு.*

கேள்வி: சக்தி ரி.வி. யில் ஒளி பரப்பாகும் "மின்னல்" நிகழ்ச்சி நடாத்துபவர் பக்கசார்புடன் பேசுவதையும் அதிகநேரத்தை தானே எடுத்துக்கொள்வதையும் அவதானித்தீரா?அது வரவேற்கத்தக்கதா?
*(ஆ.லெ.உசனார், ஏறாவூர்-03)*

*பதில்: அவதானித்தேன். அருமையான நிகழ்ச்சி. பல அரசியல்வாதிகளினதும் புத்திஜீவிகளினதும் மறுபக்கத்தை காட்டுவதாக அமைந்த அந்த நிகழ்ச்சி. அண்மைக்காலமாக நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்களில் சிலரோடு சேர்ந்து தானும் மற்றவரை நேருக்கு நேரே தாக்கிக்கொள்வது எந்தளவுக்கு அனுசரனையாளர் என்ற இடத்திற்கு ஏற்புடையதாக இருக்கின்றது என்பது பலரதும் சந்தேகம். சிலவேளைகளில், (அரசியல் சம்பந்தப்பட்ட) நிகழ்ச்சிக்கு முன்னதாகவே ஒரு சாராரோடு சேர்ந்து கலந்துபேசி இவரை இன்ன இன்னமாதிரி பேசி "ஒரு வழி பண்ணுவோம்" என தீர்மானித்துதான் நிகழ்ச்சியை தொடங்குகிறாரோ என்ற ஐயப்பாடும் அவ்வப்போது என்னுள் எழுவதுண்டு. எவ்வாறாயினும் இந்நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் தன் கருத்துக்களை தெரிவிப்பதற்கான நிகழ்ச்சி இதுவல்ல என்பதைக் காட்ட இனிமேலாவது முயல்வது நிகழ்ச்சியை தவறாது பார்க்கும் உம்மையும் என்னையும் போன்றோரின் அவாவாகும்.*

கேள்வி : சதாம் குசைன் நாட்டுக்குள்ளே இருந்துதான் தாக்குதல் நடாத்துவதாக அமெரிக்கா கூறுகின்றதே!?
*(க.வனிதா, கல்லாறு)*

*பதில்:பேரழிவு ஆயுதத்தையும் சதாமையும் பிடிக்க ஈராக்குக்கு சென்ற புஷ் இரண்டையுமே கோட்டை விட்டுட்டு இப்போது அம்புலி மாமா க தை சொல்கிறார். ஆனாலும் அமெரிக்காவின் சந்தேகம் நியாயமானது தான். ஏனெனில் பல தசாப்தங்கள் இரும்புத்திரை ஆட்சிசெய்தவர் தனக்கென "தோதான" ஒரு மறைவிடம் அமைக்காமலா இருந்திருப்பார்?!*

## கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிருவாகக் கட்டமைப்பு

- தொகுப்பு R. அபிஷேக் மே 2003

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உள்ள பொதுவான நிருவாகக் கட்டமைப்பும் நிருவாகிகளின் அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்களும்.

### 01.1 வேந்தர் (Chancellor)

1985ம் ஆண்டின் 7ம் இலக்க பல்கலைக்கழகங்கள் திருத்தச்சட்டம் பிரிவு 32 இற்கிணங்க பல்கலைக்கழகத்திற்குரிய தலைவரான வேந்தரை நாட்டின் ஜனாதிபதி அவர்கள் நியமிப்பார். இவரது பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். பட்டமளிப்பு விழாவிற்கு இவரே தலைமை தாங்குவார். எனினும் பிரதான நிறைவேற்று, கல்வித்துறை உத்தியோகத்தர் உபவேந்தரே ஆகும். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் வைத்திய கலாநிதி ரி. வரகுணம் ஆவர்.

### 01.2 உப வேந்தர் (Vice-Chancellor)

1985ம் ஆண்டின் 7ம் இலக்க திருத்தச்சட்டத்திற்கிணங்க பல்கலைக்கழக பேரவையின் சிபார்சின் பேரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட மூவரிலிருந்து ஒருவரை உப வேந்தரை நாட்டின் ஜனாதிபதி நியமிப்பார். இவரது பதவிககாலம் மூன்று ஆண்டுகளாகும். ஒருவர் ஒரே பல்கலைக்கழகத்தில் இரண்டு தடவைகளுக்கு மேல் உப வேந்தராக நியமனம் பெற தகுதியற்றவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக பேராசிரியர் மா. செ. மூக்கையா அவர்கள் பதவிவகிக்கின்றார். பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தரான இவர் பேரவை, மூதவை ஆகிய சபைகளுக்குத் தலைமை தாங்கும் முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும் கல்வித்துறை உத்தியோகத்தராகவும் காணப்படுவதுடன் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரும் ஆவார். இவரின் பணிகள்.

- ❖ பேரவையினால் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்ததுடன் தொடர்புபட்ட விடயங்கள், கொள்கைகளை நிறைவேற்றுதலும் அவற்றினை அமுல்படுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல்.
- ❖ பல்கலைக்கழகத்தினுள் ஒழுக்கத்தினை நிலைநாட்டுதல்

### 01.3. வளாக முதல்வர்(Rector):(திருகோணமலை, கலாநிதி ரி. ஜெயசிங்கம்)

பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள வளாகங்களுக்கான முதல்வர்களை அப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் நியமிப்பார். பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாயினும் குறித்த ஒரு நபர் ஒரே வளாகத்தில் தொடர்ந்து வரும் காலப்பகுதியில் முதல்வராக நியமிக்கப்படலாம்.

வளாகத்தின் முழுநேர உத்தியோத்தரான இவர் முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும், முதன்மை கல்வித்துறை உத்தியோகத்தராகவும் காணப்படுவதால் வளாகசபைக்கும் தலைமை தாங்குவார். அத்துடன்

வளாகத்தினுள் ஒழுக்கத்தினை நிலைநாட்டுதலும் இவரது பொறுப்பாகும்.

01.4 பீடாதிபதிகள் (**Deans**)

ஒவ்வொரு பீடத்திற்குமான பீடாதிபதி அந்தந்த பீடசபையினால் நியமிக்கப்படுவர். இவர்களது பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். பீடத்தின் தலைவரான இவர் கல்வி, நிருவாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக காணப்படுவார். கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள பீடங்களும் பீடாதிபதிகளும்

- ❖வர்த்தக முகாமைத்துவ பீடம் : திரு. எஸ் செந்தில்நாதன்
- ❖கலைகலாச்சார பீடம் : கலாநிதி (திருமதி) அம்மன்கிளி முருகதாஸ்
- ❖விவசாய பீடம் : கலாநிதி எஸ் ரவீந்திரநாத்
- ❖விஞ்ஞான பீடம் : கலாநிதி ஜே சீ என் ராஜேந்திரா

01.5 பதிவாளர் (**Registrar**)

தெரிவுக்குழுவின் சிபார்சின் பேரில் பேரவையினால் நியமிக்கப்படும் முழுநேர உத்தியோகத்தராவார். பல்கலைக்கழகத்தின் சொத்துக்களையும் ஏடுகளையும் பாதுகாக்கவேண்டியது இவரது பொறுப்பாகும். பேரவை, மூதவை ஆகியவற்றின் உத்தியோகபூர்வ செயலாளரும் உதவிக்கணக்கீட்டு உத்தியோகத்தரும் ஆவார். இவர் உப வேந்தரின் கண்காணிப்பு, கட்டுப்பாட்டின்கீழ் பல்கலைக்கழக பொது நிருவாகத்திற்கும் கல்விசாரா ஊழியர்களின் ஒழுக்கக்கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாக காணப்படுவார். இவர் தனது கடமைகளை உதவிப்பதிவாளர்களிடம் பகிர்ந்தளித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இங்கு பதில்பதிவாளராக திரு. ஏ டீ ஹரீஸ் அவர்கள் பதவிவகிக்கின்றார்.

- ❖ சிரேஸ்ட உதவிப்பதிவாளர்/ பரீட்சைகள் : திரு கே. பொகீந்திரன்
- ❖ உதவிப்பதிவாளர்/ நிருவாகம் : திரு. ரீ. பிரபாகரன்
- ❖ உதவிப்பதிவாளர்/ தாபனப் பகுதி(கல்விசார்) : திரு வீ காண்டீபன்
- ❖ உதவிப்பதிவாளர்/தாபனப் பகுதி(கல்விசாரா) : திரு ஏ பகீரதன்
- ❖ உதவிப்பதிவாளர்/ மாணவர், ஊழியர் நலன்புரி : திரு வீ செல்வராசா
- ❖ உதவிப்பதிவாளர்/ வெளிவாரிப்பட்டப்படிப்புகள்: திருமதி எஸ் பரராஜசிங்கம்
- ❖ உதவிப்பதிவாளர்/ விஞ்ஞானபீடம் : திரு எஸ் ராஜேஸ்வரன்
- ❖ உதவிப்பதிவாளர்/ கலை கலாசாரபீடம் : திரு என் தவராஜா

01.6 நிதியாளர் (**Bursar**): திரு. கே. என் பிரேமச்சந்திரா

இவர் தெரிவுக்குழுவின் சிபார்சின் பேரில் பேரவையினால் நியமிக்கப்படுபம் முழுநேர உத்தியோகத்தராவார். பதிவாளரது கட்டுப்பாட்டின்கீழும்

காடுகள் அழிந்தன
பட்டமரமெங்கும்
பறவைகளின் இரங்கல் கூட்டம்.
கண்ணா

மேற்பார்வையின் கீழும் பல்கலைக்கழக நிதியினை சிறந்த முறையில் நிருவகிப்பதுடன் குறித்துரைக்கப்பட்ட முறையில் கணக்குகளையும் உரிய படிவங்களையும் பேணவேண்டியது நிதியாளரின் பெறுப்பாகும். இவரது வேலைகளைப் பன்முகப்படுத்தும் வகையில் சிரேஸ்ர உதவி நிதியாளர், உதவி நிதியாளர் ஆகியோர் காணப்படுகின்றனர். சிரேஸ்ர உதவி நிதியாளர் :திரு. எம். ஏ பத்மகுமார்

01.7 நூலகர் **(Librarian)** : திருமதி. த. அருள்நந்தி


இவர் தெரிவுக்குழுவின் சிபார்சின் பேரில் பேரவையினால் நியமிக்கப்படும் முழுநேர உத்தியோகத்தராவார். இவர் உபவேந்தரது கட்டுப்பாட்டின் கீழும் மேற்பார்வையின் கீழும் பல்கலைக்கழக நூலகத்திற்குப் பொறுப்பாக நூலகத்தின் தலைவராக விளங்குவார். இவரது வேலைகளை பன்முகப்படுத்தும் வகையில் உதவி நூலகர்கள் காணப்படுவர்.

01.8 உதவி உள்ளகக் கணக்காய்வாளர் (Assistant Internal Auditor) : திரு. எஸ் திருவருட்செல்வன்

உள்ளகக் கணக்காய்வாளரானவர் தெரிவுக்குழுவின் சிபார்சின் பேரில் பேரவையினால் நியமிக்கப்படும் முழுநேர உத்தியோகத்தராவார். இவர் உபவேந்தரது கட்டுப்பாட்டின்கீழும் நேரடி மேற்பார்வையின்கீழும் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டினை வினைத்திறனாகப்பேணும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்குவைத்தல் முறைகள் சம்பந்தமாக உள்ள பலம் மற்றும் பலவீனங்கள் சம்பந்தமாக உபவேந்தருக்கு ஆலோசனை கூறுபவராகவும், இது சம்பந்தமான அறிக்கை சமர்ப்பிப்பவராகவும் காணப்படுவார்.

ஹீரோயின் : நான் சின்ன வயசில துணி வாங்கக்கூட பணமில்லாமல் ரொம்பக் கஷ்டப்பட்டேன்

டைரக்டர் : அடடா! இப்ப நிறையப் பணமிருந்தும் அதே கஷ்டத்தை அனுபவிக்கிறீங்களே, பாத்தீங்களா.



☞ மேற்கிந்திய வீரர் சேர் கார்.்.பீல்ட் சோபஸ் தனது இரு கைகளிலும் ஆறு விரல்களைக் கொண்டிருந்தார். இவை அவரின் பாடசாலைப் பருவத்திலேயே சத்திர சிகிட்சை மூலம் அகற்றப்பட்டன.

☞ முதல் மூன்று உலகக் கிண்ணக் கிறிக்கட் போட்டிகளிலும் விளையாடியவர்களுள் ஐந்து (5) விக்கட்டுக்களையும், நூறு(100) ஓட்டங்களையும் பெற்ற ஒரே வொருவர் இந்தியாவின் கபில்தேவ் ஆவார்.

மெழுகே ....
உனக் கென்ன விதியோ
உனையுருக்கி ஒளிகொடுக்க....

## இலங்கைத் தேசிய நூலகம்

திருமதி.த.அருள்நந்தி, பதில் நூலகர், கி.ப.கழகம்

இன்று ஒவ்வொரு நாட்டிலும் அமைந்த எந்த ஒரு நூலகமும் தகவல்களைக் கொடுக்கும் மையங்களாக (Information Centre) மாறியுள்ளன மாறிவருகின்றன. இவற்றுள் தேசிய நூலகங்கள், பொதுநூலகங்கள், கல்வி நூலகங்கள் (பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகங்கள் ) சிறப்பு நூலகங்கள் என்பவற்றை குறிப்படலாம். நூலகம், நூலகத் தகவல் விஞ்ஞானமாக மாறி வருதலுக்கு இன்றைய அபரிதமான தொழிநுட்ப வளர்ச்சியும் முக்கிய பங்கை வகிக்கின்றது. ஒரு நாட்டின் தகவல்களையும், அந்நாட்டுக்குத் தேவையான முழுத்தகவல்களையும் சேகரித்துப் பாதுகாத்துப் பாவனைக்குக் கொடுப்பதில் தேசிய நூலகங்கள் முன்னிற்கின்றன. இத்தகைய சேவையை வழங்கும் தேசிய நூலகம் பற்றி நோக்க முன் உலகளாவிய சில தேசிய நூலகங்கள் பற்றி அறிதல் பொருத்தமுடையது.

### இலங்கை தேசிய நூலகசபை

உலகிலுள்ள சிறப்பான தேசிய நூலகங்களின் வரிசையில் இலங்கைத் தேசிய நூலகமும் உள்ளதை அதன் சேவை, செயற் திட்டங்கள் மூலம் அறியலாம். இந்நூலகத்தின் தோற்றத்திற்கு அடிநாதமாக இருந்தது நூலக சபையாகும். இலங்கை நூலக வரலாற்றில் இலங்கை நூலக சபை ஒரு முக்கியமான மையக்கல்லாக உள்ளது. இந்நூலக சபை, நூலகம் என்பவற்றின் தோற்றத்திற்கு 1964இல் மணிலாவில் யுனெஸ்கோவினால் "ஆசிய பசுபிக் பிராந்தியங்களில் தேசிய நூலகங்களின் அபிவிருத்தி", 1968ல் வீயன்னாவில் நடைப்பெற்ற "ஐரோப்பிய தேசிய நூலகங்கள்" பற்றிய கருத்தரங்குகள் உற்சாகமளித்தன. மேலும் தேசிய நூலகத்தின் அவசியத்தையும் பயன்பாட்டையும் பற்றி பல அறிக்கைகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன, அவற்றில் சில :

- 1951ம் ஆண்டு கொழும்பு மாநகரசபை முதல்வர் டி.சி.ஜி.அபயவிக்கிரமா தேசிய நூலகம் அவசியம் எனக் கூறியது.
- 1955ல் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிக் கூறிய விசாரனைக்குழுவின் அறிக்கையில் தேசிய நூலுக சபை தோற்றத்தின் முக்கியத்துவம் குறிப்பிடப்பட்டமை.
- 1958ல் திரு. பி. கந்தையா அவர்கள் கொழும்பு பொது நூலகம் பற்றிய தனது அறிக்கையின் தேசிய நூலகத்தின் முக்கியம் பற்றிக் கூறியமை.
- 1959ல் வெளியிடப்பட்ட இலங்கை தொல் பொருட்கள் பற்றிய விசாரணைக்குழு அறிக்கையில் தேசிய நூலகம் அமைக்கப்படல் பற்றிய அறிவுறுத்தல்.
- 1969ல் யுனஸ்கோ நிறுவன உதவியுடன நூலக அறிஞர்கள் நடாத்திய மாநாடு வழங்கிய ஆலோசனை.

இதனடிப்படையில் தேசிய நூலகத்தின் அவசியத்தை கருத்திற்கொண்டு 1970ல் நூலகச் சட்டம் உருவாக்கப்பட்டு 17ம் இலக்கச் இலங்கைத் தேசிய நூலக சபைச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இதன்பின் 1970, யூனில் தேசிய நூலக சபை நிறுவப்பட்டது. இதுவே இன்றைய சகல நூலகங்களின் வளர்ச்சிக்கும் வித்திட்டது என்பதை மறுப்பதற்கில்லை. இச்சபையின் அதிகாரங்கள் அல்லது கடமைகளைப் பின்வருமாறு அடையாளம் காணலாம்.

- நாட்டில் உள்ள சகலவிதமான (பொது, கல்வி, விசேட அரசாங்க) நூலகங்களையும் அபிவிருத்தி செய்ய ஆலோசனை, உதவி செய்தல்.
- தேசிய நூலகத்தை நிறுவுதல்.
- நாட்டில் பொது நூலகங்களின் சேவைகளை ஊக்குவித்து அபிவிருத்தி செய்ய ஆலோசனை அல்லது வழங்குதல்.
- ஆவணங்களின் வெளியீட்டிற்கும், கட்புல, செவிப்புல சாதனங்களின் உற்பத்திக்கு உதவி ஆலோசனைகள் வழங்குதல்.
- நூலக உத்தியோகத்தரின் கல்வித்தரம், தொழில் தரம் என்பவற்றை உயர்த்துவதற்கு அரசிற்கு உதவி வழங்கல்.
- நூலகவியற்கல்வி, பயிற்சியை அபிவிருத்தி செய்தல்.
- நூலக சேவைகளின் அபிவிருத்திக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

தேசிய நூலகம்

1970ம் ஆண்டின் தேசிய நூலக சபைச் சட்டத்தின் 14ம் பிரிவின்படி ஒரு தேசிய நூலகம் அமைப்பது சபையின் முக்கிய கடமையாகும். ஆகவே இச்சபையின் பிரிவாக தேசிய நூலகம் அமைக்கப்பட்டது. தேசிய நூலகம் பற்றிய முன்னோடிச் சிந்தனைகள் நம் நாட்டு அறிஞர்கள் மத்தியில் இருந்ததை அறிய முடிகிறது. 1870ல் காணப்பட்ட அரச கீழைத்தேய நூலகம் இலங்கையின் முதலாவது நூலகத்தன்மையுடையது என முன்னாள் நூலக சேவைகளின் பணிப்பாளர் திரு.கே.டி. சோமதாச கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூலகம் 1877ம் ஆண்டில் கொழும்பு அரும் பொருட் சாலையினது நூலகத்துடன் இணைக்கப்பட்டது.

நூலக சபை ஆரம்பிக்கப்பட்டது முதல் தேசிய நூலகப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டதால் 1970களில் இதற்கான அடித்தளம் இடப்பட்டது எனலாம். 1990ம் ஆண்டு முதல் தேசிய நூலகம் கொழும்பு சுதந்திர வீதியில் உள்ள அதற்குரிய கட்டிடத்தில் செயற்படத் தொடங்கியது. 11250 ச.மீட்டர் தளப் பரப்புடன் 5 தளங்களையுடையது. 866 மீட்டர் நூல் இறாக்கைளில் அண்ணளவாக 250,000 நூல்களைக் கொண்டுள்ளது. முந்நூறுக்கு மேற்பட்ட வாசகர்கள் அமர்ந்திருந்து வாசிக்கக்கூடிய மூன்று வாசிக்கும் அறைகள். பல கற்கை அறைகள், கேட்போர் கூடம், மாநாட்டறை முதலியவற்றை தன்னகத்தே கொண்டது. இதனது சேவைகள், பணிகள், சேகரிப்புக்கள், வெளியீடுகள் எனபவை மூலம் இது இன்று ஒரு தகவல் நிலைய நூலகமாகத் திகழ்கின்றது. (தொடரும்...)

## பெண் ஊழியருக்கான பிரசவகால நன்மைகள்

தொகுப்பு: ரெட்ணராஜ், கி.ப.த

தாய், சேயின் நலன் கருதி, தொழில் புரியும் பெண்களுக்காக அரசாங்கம் சில சட்ட நெறிகளை வகுத்துள்ளது. இந்நன்மைகள், தொழில் நிர்வாகங்களால் உரிய முறையில், பெண்ணூழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் சட்டம் கூறுகிறது.

சட்டநெறிகளால் வழங்கப்பட்ட இவ்வுரிமைகளை வழங்க தயங்கும் நிர்வாகத்தின் மீது தொழிற்சங்கம் மூலமாகவோ அல்லது நேரடியாக நீங்களே உங்கள் பகுதி உதவிதொழில் ஆணையாளரை அணுகி பரிகாரத்தை பெற்றுக் கொள்ளலாம். எனினும் பின்வரும் இடங்களில் தொழில்புரிவோர் இச்சட்டங்களிலிருந்து விலக்களிக்கப் பட்டிருக்கிறார்கள்.

அ) சிறுவர் நன்னடத்தை நிலையங்கள்
ஆ) அனாதை பராமரிப்பு நிலையங்கள்
இ) பார்வை இழந்தோருக்கான தொழிற் பயிற்சி நிலையம்.
ஈ) வாய் பேச இயலாதோருக்கான தொழிற் பயிற்சி நிலையம்
உ) காது கேளாதோருக்கான தொழிற் பயிற்சி நிலையம்
ஊ) வீடுகளில் சேவகிகளாக கடமையாற்றுவோர்

பெண்ணூழியர்களனைவருக்கும் குழந்தை பேற்று நன்மைகளை பெற சட்டத்தில் இடமுண்டு. ஆயினும் விடுமுறைகள், கொடுப்பனவுகள் என்பன அவரவர் தொழில் புரியும் அமைப்புகளுக்கேற்ப வேறுபடுகின்றது. இதற்கேற்ப இதை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1) வியாபார நிலையங்கள் மற்றும் செயலகங்களில் (Shop and office) கடமை புரிவோர்
2) இவை தவிர்ந்த இடங்களில் கடமை புரிவோர்
3) துண்டு வேலை (Piece work) செய்வோர்

### *(1) வியாபார நிலையங்கள் மற்றும் செயலகங்களில் கடமை புரியும் பெண்கள் :*

இதில் சில்லறை, மொத்த வியாபார நிலையங்கள், உணவகங்கள், உணவுடன் மதுபானம் வழங்கும் நிலையங்கள், தலைமுடி திருத்தும் நிலையங்கள், உடைகழுவி சீர்படுத்தும் நிலையங்கள், படப்பிடிப்பு நிலையங்கள் என்ற ரீதியிலும் வங்கி, காப்புறுதி, தரகுத் தொழில் மற்றும் அனைத்து தொழில் அமைப்புகளை சேர்ந்த செயலகங்களில் கடமை புரிவோரும் இவற்றிற்கு இணையான நிலையங்களில் கடமை புரிவோரும் அடங்குவர்.

*இவர்களுக்காகன முழுமையான சம்பளத்துடனான* விடுமுறைகள்

அ) முதல் இரண்டு குழந்தைகளுக்கு 84 வேலை நாட்கள் விடுமுறையும்,
ஆ) மூன்றாம், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் 42 வேலை

நாட்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

இ) இறந்து பிறக்கும் குழந்தைக்கு 42 நாள் விடுமுறை.

இவ்வமைப்பினரின் விடுமுறை நாட்கள் கணக்கிடப்படும் போது ஒருவாரம் என்பதை 5½ நாட்களாகவும் மற்றும் சட்டப்படி உரித்தான வர்த்தக விடுமுறை நாட்கள், நோன்மதி தினங்களை கழித்தே கணக்கிட வேண்டும்.

(உ+ம்) தை மாத்தில் 4 சனிக்கிழமை ( ½ x 4 = 2) , 4 ஞாயிற்றுக்கிழமை ( 4 x 1 = 4),1 நோன்மதி தினம், 1 பொங்கல் விடுமுறையும் உண்டு. எனவே தை மாத்திற்கான பிரசவ விடுமுறை நாட்கள் => 31 – (2 + 4 + 1 + 1) = 23

*(2) வியாபார நிலையங்கள் மற்றும் செயலகங்கள் தவிர்ந்த இடங்களில் கடமைபுரிவோர் :*

பெருந்தோட்டத்தைச் சேர்ந்த பெண் தொழிலாளிகள் மற்றும் அதன் குழந்தைகள் காப்பக சேவகிகள், நலன்புரி அதிகாரிகள் ஆகியோர் அடங்குவர்.

மற்றைய தொழில் அமைப்புக்களை எடுத்துக் கொண்டால் அதன் வியாபார நிலையங்களில் தொழில் புரியாத அனைவரும் இதில் அடங்குவர்.

*(3) துண்டு வேலை செய்வோர் :*

அதாவது தாம் செய்து முடிக்கும் அளவிற்கேற்ப சம்பளம் பெறுவோர். உ+ம் ஒரு தோட்ட தொழிலாளி அல்லது துண்டு வேலை செய்யும் பெண் ஊழியர் இவர்களின் நாட் சம்பளம் கணிக்கப்படும் விதம் சற்று வித்தியாசமாக உள்ளது. மற்றப்படி வியாபார நிலையங்கள் மற்றும் செயலகங்களை தவிர்ந்த இடங்களில் வேலை செய்வோருக்கான அனைத்துச் சலுகைகளும் உண்டு.

அ) முதல் இரண்டு குழந்தைகளுக்கும் 12 வாரம் (84 நாட்கள்)

ஆ) மூன்றாவது, அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் 06 வாரம்

இ) இறந்து பிறக்கும் குழந்தைக்கு 06 வாரகாலம்

ஈ) இவ் விடுமுறைகளை பிரசவத்திற்க்கு இரண்டு வாரங்களுக்கு முன்னும் பெறலாம். ஆயினும் அது கட்டாயமானதல்ல.

இங்கு விடுமுறை பெறும் நாளிலிருந்து தொடர்ச்சியன 85ம் நாள் அல்லது 43ம் நாள் கடமைக்குச் சமூகமளிக்க வேண்டும்.

*கொடுப்பனவுகள் :*

ஞாயிறு விடுமுறையாகையால் மாதச் சம்பளம் பெறும் ஊழியர் ஒருவர் 84 நாள் விடுமுறைக்கு உரித்துடையவராயின் 72 நாட்களுக்கும் 42 நாட்களாயின் 36 நாட்களுக்கும் சம்பளம் வழங்கப்படும். காரணம், கணிக்கப்படுவதாகும்.

பெருந்தோட்டங்களில் வித்தியாசமான கணிப்பே நடைபெறுகின்றது.(அ-து) ஒரு தொழிலாளியின் அடிப்படை நாட் சம்பளம் ரூ121.00 ஆகும். இத்துடன் மேலதிகமாக ரூ14.00 வழங்கப்பட்டாலும் இத் தொகையின் சேமலாப நிதிக்கு இவர் உரித்துடையவரல்ல. இதனடிப்படையில் 84 நாளுக்குரித்துடையவர் சேமலாபநிதி கழிக்கப்படாதவிடத்து 9720.00 ரூபாவும், சேமலாபநிதி கழிக்கப்பட்ட நிலையில் 8849.00 ரூபாவும் பெறுவார். அதே போல் 42 நாளுக்கு இதன் அரைவாசியையும் பெறுவார்.

**துண்டு வேலை செய்யும்ஒரு பெண்ணின் நாட்சம்பளம் கணிக்கப்படும் முறை.**

இவர் குழந்தை பெறுவதற்கு முன்னருள்ள 06 மாதப் பகுதியினுள் வேலைக்கு வந்த நாட்கள், அக் காலப்பகுதியில் பெற்ற சம்பளம் என்பதன் சராசரி அடிப்படையில் ஒரு நாளைய சம்பளம் கணக்கிடப்பட்டு 84 நாட்களுக்கு உரித்துடையவராயின் 72 நாளுக்கும் 42 நாட்களுக்காயயின் 36 நாளுக்கும் வழங்கப்படும். உ+ம் :

சரஸ்வதி பிரசவ விடுமுறையில் செல்லும்முன் கடந்த 6 மாதங்களில் 120 நாட்கள் வேலை செய்து ரூபா. 24,000.00 ஊதியமாகப் பெற்றால்.

மாதச் சராசரி நாட்கள் = 20, மாதச் சராசரி வேதனம் = 4000

∴ 1 நாட் சம்பளம் = 4000/20 = 200

12 வார விடுமுறைக்கு ( 200x72) = 14,400.00, 06 வாரத்திற்கு = 7,200.00

இவற்றைவிட மேலதிகமாக குழந்தையானது ஒரு வயதையடையும் வரை குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்காக (2), (3) பிரிவு ஊழியர்களுக்கு தினமும் 1 மணி நேர ஓய்வுகள் இரண்டு அளிக்கப்படும். ஆனால் இவ்வூழியர்கள் தொழில்புரியும் நிலையங்களில் குழந்தைகள் காப்பகங்கள் இருக்குமாயின் இது இரண்டு ½ மணி நேர ஓய்வாக குறைத்து வழங்கப்படும். இது உணவுநேர ஓய்வு மற்றும் வேறு ஓய்வுகளுக்கு மேலதிகமாக வழங்கப்பட வேண்டும்.

*இறந்து பிறக்கும் குழந்தை :*

குழந்தை குறைந்தது 12 அங்குல நீளமுள்ளதாகவோ அல்லது 2 இறாத்தல் நிறையுடையதாகவோ இருந்தால் மாத்திரமே ஊழியர்களுக்கு இதன்கீழ் கிடைக்கும் கொடுப்பனவும் விடுமுறையும் வழங்கப்படும்.

தாயின் உடல் நலம் பேணப்படும் நோக்கத்தோடு அப்பெண் ஊழியர் குழந்தை பெற மூன்று மாதங்கள் தொடங்கி குழந்தை பெற்று மூன்று மாதம் முற்றுப் பெறும் வரை தாயின் அல்லது குழந்தையின் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் வேலைகளில் ஈடுபடுவதிலிருந்து இவர்களுக்கு விலக்களிக்கப்பட வேண்டும்.

*வேலை நீக்கம் :*

ஒரு பெண் ஊழியர் பின்வரும் காரணங்களுக்காக வேலை நீக்கம் செய்யவியலாது.

01. பிரசவகால விடுமுறையில் இருக்கும் காலப்பகுதியில்
02. கர்ப்பமுற்றுள்ளாள் அல்லது குழந்தையை பெற்றுள்ளாள் என்பதற்காக.
03. கர்ப்பம் அல்லது பிரசவம் காரணமக நோய்வாய்ப்பட்டால்.

ஆயினும் கர்ப்பம் அல்லது பிரசவம் சம்பந்தப்படாத வேறு குற்றங்களுக்காக நடவடிக்கையெடுக்க நிர்வாகத்திற்கு அதிகாரமுண்டு.

பிரசவ விடுமுறையில் இருக்கும்போது மரணத்தைத் தழுவினால் விடுமுறை தொடங்கிய நாள் முதல் மரணத்தைத் தழுவிய நாள் உட்பட அவரின் குடும்ப உரித்துடையவருக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டும். (*முற்றும்*)

பிரமுகர் பக்கம் நேர் காணல்

ஒரு நாட்டின் அதி உயர் கல்விப்பீடமாக விளங்கும் பல்கலைக்கழகம் ஒன்றின் கல்விசார், மற்றும் செம்மையுறு நிர்வாகச் செயற்பாடுகளுக்கு (*Academic and Administrative Functions*) அத்தியாவசியமாக விளங்குவது பயனுறுதி மிக்க முகாமைத்துவம் (*Effective Management*) ஆகும்.

இன்று பல்கலைக்கழக முகாமைத்துவத்தில்(*Management of University*) பதிவாளர்களும், நிதியாளர்களும் பல்கலைக்கழகங்களை முகாமை செய்வதில் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு(*UGC*), 'பல்கலைக்கழக முறைமை நிர்வாகம்' சம்பந்தமான பயிற்சித்திட்டம் ஒன்றினை ஐக்கிய இராச்சியத்திலும் நோர்வேயிலும் அண்மையில் ஒழுங்கு செய்திருந்தது. இப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து நாடு திரும்பிய பதினொரு பல்கலைக்கழக நிர்வாகிகளுள் எமது பல்கலைக்கழகத்தின் பதில்பதிவாளர் திரு.*A.D.*ஹரிஸ் அவர்களும் ஒருவராவார்.

எமது ஊழியர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், ஆஸ்தான கவிஞரும், கிழக்கொளியின் முதல் பிரதம ஆசிரியராகவும் விளங்கிய திரு.இரா.இராஜேஸ்வரன் (உதவிப்பதிவாளர்) அவர்களை, திரு.ஹரிஸ் அவர்களை, நேர்கண்டு பெற்ற செவ்வியை பிரமுகர் பக்கத்தில் முதல்முதலில் வெளியிடுவதில் பெருமையுறுகிறோம்.

இராஜேஷ்:- கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பதில்பதிவாளராக பணியாற்றிவரும் தாங்கள், தங்களின் ஆரம்பப் பணிகள் பற்றி சுருக்கமாக விளக்குவீர்களா?
ஹரிஸ் :- ஆமாம். நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 01.07.1987 தொடக்கம் 03.05.1993 வரைக்கும் உதவிப்பதிவாளராகவும், *04.05.1993* தொடக்கம் 06.03.2002 வரைக்கும் சிரேஷ்ட உதவிப்பதிவாளராகவும, 07.03.2002ல் இருந்து தற்போது பதில்பதிவாளராக பணியாற்றி வருகிறேன்.

இராஜேஷ்:- பல்கலைக்கழகமொன்றின் நிர்வாகி என்ற வகையில் இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்வி அபிவிருத்தியானது எந்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றதென தாங்கள் கருதுகின்றீர்கள் ?
ஹரிஸ் :- மூன்றாம்நிலைக் கல்விநிறுவனங்களில் பயின்றுவரும் இன்றைய இளைஞர் சமுதாயத்தினை, நாளைய திறன்மிகு மனித வளங்களாக மாற்றியமைக்கும் முதன்மைக்காரணியாக விளங்குவது இந்த மூன்றாம் நிலைக்கல்வி. மேலும் அனைத்துப்பிரஜைகளும் கூட உயர்வருமானம், வாழ்க்கைத்தரம், தரம் வாய்ந்த பொதுசன சேவைகள் மற்றும் போட்டி மனப்பாங்குள்ள தனியார்துறை என்பனவற்றால் உச்சப்பயனடைந்து வருகின்றனர் எனலாம்.

இராஜேஷ்:- இப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளமை குறித்து, கிழக்கு பல்கலைக்கழக சமூகம் மிக்க மகிழ்ச்சியடைகிறது. இப்பயிற்சிக்கு தாங்கள் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டீர்கள் என்பதையும் பயிற்சிக்காலத்தின்போது பெற்ற அனுபவங்கள் பற்றியும் கூறமுடியுமா?

ஹரிஸ் :- பல்கலைக்கழகநிர்வாகிகளுக்காக சேவைப்பயிற்சி மற்றும் திறன் விருத்தியின் (*Skill Development*) அவசியத்தை உணர்ந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவானது, உலக வங்கியின் நிதியுதவியுடன் இப் பயிற்சி நிகழ்ச்சி திட்டத்தினை(*Training Programme*) ஒழுங்கு செய்திருந்தது. ஆரம்பத்தில் உள்நாட்டில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் தலா மூவரும், பல்கலைக்கழக மானியங்கள்

ஆணைக்குழுவிலிருந்து மூவருமாக, இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தால்*(SLIDA)*, ஆடி - ஆவணி, *2002* காலப்பகுதியில் நடாத்தப்பட்ட இத் திட்டத்தில் பங்கு பற்றினர். இவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாக முறைமைகள் பற்றி வெளிநாட்டில் பயிற்சியினை வழங்கும் முகமாக, அவர்கள் உள்நாட்டுப் பயிற்சியின் போது, வெளிப்படுத்தயிருந்த செயற்றிறன்*(Performance)* அடிப்படையில் 11 நிர்வாகிகளை ஐக்கிய இராச்சியத்திற்கும்*(U.K)*, நோர்வேயிற்கும்*(Norway)* அனுப்பப்பட்டனர். ஐக்கிய இராச்சியத்திற்கு அனுப்பப்பட்டோர், "மான்செஸ்ரர்" *(Manchester)*, "பிறிஸ்ரல"*(Bristol)*, "எசெக்ஸ்"*(Essex)*, "கீல்" *(Keel)* மற்றும் "ஹல்"*(Hull)* ஆகிய பல்கலைக்கழகங்களில் பயிற்சிகளைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நா்னும் களனிப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஒருவரும் "மான்செஸ்ரர்" பல்கலைக்கழகத்தில் பயிற்சிபெற ஏற்பாடாகியிருந்தது. மேற்படி பல்கலைக்கழகங்களுக்கு எல்லோரும் அனுப்பப்பட முன்னர், இலண்டனில் அமைந்துள்ள fபோஸ்டர் ஹவுஸ் *(Foster House)*என அழைக்கப்படும் பொது நல வாய காரியாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "ஐக்கிய இராச்சியத்தில் உயர்கல்வி முறைமை" *(Higher Educational System in U.K.)* பற்றிய வழிகாட்டல் விளக்கங்கள் *(Orientation)* எமக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த அமர்வின் மூலம், முற்று முழுதான வேறுபட்ட சூழலில் உள்ள மக்களுடனும், மற்றும் முறைமையுடனும் எமக்கு பரிச்சயம்*(Familiarity)* ஏற்பட்டதுடன் வெளிநாட்டுப் பயிற்சித்திட்டத்தை நம்பிக்கையுடன் தொடர நல்லதொரு ஆரம்பமாகவும் அமைந்ததெனலாம். எமது பயிற்சி 19.03.2003ல் ஆரம்பமாகியது.


Senior Delegates attending the seminar in Derby, UK

ஐக்கிய இராச்சியத்தில் மிகப்பழமையானதும், பிரபல்யம் வாய்ந்ததுமான "மான்செஸ்ரர்" பல்கலைக்கழகத்தில் தற்போது 23000 மாணவர்களுள்ளனர். 7500 போதனை சார், போதனை சாரா உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர். அடிப்படையில், ஐக்கிய இராச்சிய பல்கலைக்கழகங்கள், இலங்கைப் பல்கலைக்கழக கட்டமைப்பினைக் கொண்டிருந்த போதிலும், அவை வகித்துவரும் பங்கானது பாரிய வேறுபாடுடையதாகும். அங்கு "ஆளும் அதிகார சபை" *(Governing Authority)* எனப்படும் பல்கலைக்கழகப் "பேரவை"யானது இரண்டு மாணவப் பிரதிநிதிகள் *(Student Representatives)* உட்பட மொத்தம் இருபத்தொரு உறுப்பினர்களைக் *(Members)*கொண்டுள்ளது. நியமன உறுப்பினரே *(Appointed Member/ Lay Member)* பேரவைக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குவார். துணைவேந்தரும் பதிவாளரும் தலைவருக்கு துணையாக இருப்பர். இப் பேரவைக் கூட்டத்தில் ஒரு அவதானியாக கலந்து கொள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்பு ஒரு பாக்கியமாகும்.

இராஜேஷ்:- கடந்த 150 வருடங்களுக்கு மேலாக உயர்கல்விப் போதனை மற்றும் ஆய்வு *(Teaching and research)* ஆகிய துறைகளில் கொடிகட்டிப்பறக்கும் "மான்செஸ்ரர்" பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் நிர்வாக செயற்பாடுகள் பற்றி "கிழக்கொளி" வாசகர்களுக்கு விளக்குவீர்களா?

ஹரிஸ்:- இப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரின் தலைமையின் கீழேயே பொது நிர்வாகமும், நிதி நிர்வாகமும் கவனிக்கப்படுகிறது. இங்கு விஞ்ஞான தொழிநுட்ப நிறுவனமும் (*UMIST*) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மாணவர் அனுமதியைப் பொறுத்தவரையில், 80%-*85%* மான உள்ளூர் மாணவர்களும், மீதமானோர் வெளிநாட்டு மாணவர்களுமாக உள்ளனர். பிரித்தானிய பல்கலைக்கழகங்கள் தத்தம் கற்பித்தல், ஆய்வுமுயற்சிகளுக்கு இங்கிலாந்திற்கான நிதிவழங்கும் நிறுவனங்கள் (*HEFCE*) மூலம் நிதியைப் பெற்றுவருகின்றது.மேலும் தகவல் தொழிநுட்ப வேவைகள், கணணி மயப்படுத்தப்பட்ட... (இதன் தொடர்ச்சி...30ம், 41ம் பக்கங்களில்.)

## கிழக்கொளி செய்திகள்

### அனுதாபங்கள்


வீரசிங்கம்


கருணாகரன்


எமது பல்கலைக்கழகத்தின் ஆரம்ப காலம்முதல் சேவையாற்றிக் கடந்த 06.02.2003 அன்று மரணமடைந்த திரு. பீ வீரசிங்கம் (சாரதி) அவர்களுக்கும், கடந்த 21.11.2002 அன்று மரணமான திரு எஸ். கருணாகரன் (அலுவலக ஊழியர்) அவர்களுக்கும் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் சார்பாக கிழக்கொளி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

### துயர் பகர்கின்றோம்.





அண்மையில் இரத்தினபுரியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, மண்சரிவு அனர்த்தங்களால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தினை கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் நடைமுறைப்படுத்தியது. கிழக்குவாழ் மக்களிடமிருந்தும் பல்கலைக்கழக மாணவர், உத்தியோகத்தர்கள் மற்றும் விரிவுரையாளர்களிடமிருந்தும் கிடைத்த உதவிப் பொருட்களுடன் சென்ற கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கிழக்குப்பல்கலைக்கழக கூட்டுறவுத் தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள டேல தோட்டம், பள்ளிகாவத்தை தோட்ட மக்களிடம் நேரடியாக கையளித்தனர். இவ்வரிய முயற்சியில் பெரும் ஒத்துழைப்பும் உதவியும் நல்கிய பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் மற்றும் பொது மக்களுக்கும் கிழக்கொளி தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இரத்தினபுரி DANA உலக இணையப் பல்கலைக்கழக பொது முகாமையாளர் திரு. பிலிப் அவர் களுக்கும், அவரது நிலைய விரிவுரையாளர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது!





## உலகக்கிண்ண கிரிக்கட் - 2003 ஒரு கண்ணோட்டம்

ம.சதீஷ்

கடந்த பெப்ரவரி-மார்ச் 2003 இல் தென்னாபிரிக்கா, சிம்பாப்வே மற்றும் கென்யா ஆகிய மூன்று ஆப்பிரிக்க நாடுகளிலே நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கட் பேட்டிகளில் பங்குபற்றிய அணிகள் பற்றிய ஒரு கண்ணோட்டமாக இது அமைகின்றது.

அவுஸ்திரேலிய அணி 1999 உலகக் கோப்பை போட்டிகளுக்குப் பின்னர் மேலும் உத்வேகம் பெற்று பெரும்பாலான போட்டிகளில், எதிர்ப்பின்றியே வெற்றிகளைப் பெற்றுள்ளது. இவ்வணி, ஒழுக்கட்டுப்பாட்டு விடயத்தில் பல சர்ச்சைகளைத் தோற்றுவித்தாலும், அதன் சீரிய முன்னேற்றத்திற்குக் காரணங்களாயமைவது, வெற்றி தாகமும், போராடும் குணமும் தான். எந்தவொரு இக்கட்டான சூழ்நிலையிலும், குறித்த இலக்கை நோக்கிப் பயணிக்கக்கூடிய அணியாக இது விளங்குகின்றது. எந்த வொரு தனிநபரையும் நம்பியிராமல், அணியின் கூட்டுமுயற்சியால் அதன் வெற்றிப்பயணம் தொடர்கின்றது. லீக் போட்டிகளில் இங்கிலாந்து, சுப்பர் சிக்சஸ் போட்டிகளில் நியூசிலாந்து, அரையிறுதியில் இலங்கை போன்ற அணிகள் குறைந்த ஓட்ட எண்ணிக்கையில் அவுஸ்திரேலிய அணியை ஆட்டமிழக்கச் செய்தாலும் கடைநிலை வீரர்களின் துடுப்பாட்டத்தாலும், பந்துவீச்சாலும், திறமையான களத்தடுப்பாலும் வியக்கத்தகு வெற்றிகளைப் பெற்று, ஒரு போட்டியிலும் தோல்வி காணாத அணியாக, உலகக் கோப்பையைத் தன்வசப்படுத்தியது.

இந்திய அணி 1983 உலகக் கோப்பைப் போட்டிகளில் காட்டிய போராடும் குணம், 2002 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற நட்-வெஸ்ட் முக்கோணத் தொடரில் வெளிப்பட்டது. மேலும், இலங்கையில் இடம்பெற்ற மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கையுடன் இணைந்து கிண்ணத்தைப் பெற்றதும் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியது. எனினும் ஒல்லாந்து அணியுடன் சிரமப்பட்டுப் பெற்ற வெற்றியும், அவுஸ்திரேலிய அணியுடனான படுதோல்வியால் இந்திய அணிமேல் இருந்த நம்பிக்கையை சரிந்தது. எனினும், சச்சின் பல போட்டிகளில் தனிமனிதனாக நின்று அணியை இறுதிப்போட்டிவரை முன்னேற்றினாலும் இறுதிப்போட்டியில் துரதிர்ஷ்டவசமாக இவர் ஆட்டம் முதல் ஓவரிலேயே முடிவுக்குவந்தது. இந்திய அணிக்கு, இறுதிப்போட்டியில் ஏற்பட்ட படுதோல்வியானது கவலை தந்தாக தெரியவில்லை. ஓரிரு வீரர்களைத் தவிர அணித்தலைவர் உட்பட ஏனையோர் இறுதிப்போட்டியில் விளையாடுவதே பெரிய விடயம் எனும் உணர்வுடன் விளையாடினர். ஆயினும் ஓரளவுக்கு ஒருமைப்பாட்டுடன் சகலதுறைகளிலும் வீறுகொண்டெழுந்து எதிரணியினரை துவம்சம் செய்ததையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

சகல துறைகளிலும் தேர்ச்சி பெற்ற தென்னாபிரிக்க அணி வெற்றி பெறக்கூடிய போட்டிகளில் அதிர்ச்சித் தோல்வியைத் தழுவுவதும், முக்கிய போட்டிகளில் மழையால் அதற்கு அநீதி இழைக்கப்படுவதும் 1992ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து தொடர்கிறது. இது இன ஒடுக்குமுறைகளுக்காய் இந்நாட்டுக் கிடைத்த சாபக்கேடு என்றே நம்பப்படுகின்றது.

பாகிஸ்தான் அணியில், அதன் மூத்த வீரர்களிடையேயான போட்டி மனப்பான்மை, மனக்கசப்பு, அரசியல் தலையீடுகளால் ஒருமித்த பங்களிப்பின்மை காணப்பட்டது. இதனால் எதிரணிகளால் இலகுவாக வெல்லப்படக் கூடிய அணியாக

காணப்பட்டது.எனினும் சகலதுறை ஆட்டக்காரர் வாசிம் அக்ரம் 500 விக்கட் என்னும் மைல்கல்லைத் தாண்டினார்.

இங்கிலாந்து அணி இளம் வீரர்களைக் கொண்ட பலம்வாய்ந்த அணியாக காணப்பட்டாலும் சிம்பாப்வேயில் அவ்வணியுடன் விளையாட மறுத்ததன் காரணத்தினால் அதுவும் சுப்பர் சிக்ஸ்ற்குள் நுழைய முடியாமல் போனது. இதுவரை நடைபெற்ற மூன்று உலகக் கிண்ண போட்டிகளில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றாலும், ஒரு தடவையேனும் இதனால் உலகக் கிண்ணத்தை கைப்பற்ற முடியவில்லை.

எதிர்பாரா திருப்பங்களை ஏற்படுத்தக் கூடிய நியூசிலாந்து அணியானது ஸ்ரீபன் பிளமிங்கின் வழிநடத்தலின் கீழ் லீக் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா ஆகிய அணிகளைத் தோற்கடித்தாலும், கென்யாவுடனான போட்டியில் விளையாட மறுத்ததன் காரணத்தினாலும், மூன்று சுப்பர் சிக்சஸ் போட்டிகளில் ஒரு வெற்றியே பெற்றதாலும் அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

எதிர்பார்க்கப்பட்ட அணிகளுள் ஒன்றான மேற்கிந்தியத் தீவுகள் அணி தென்னாபிரிக்காவை முதற்போட்டியிலேயே தோற்கடித்தாயினும் இலங்கை, நியூசிலாந்து அணிகளுடன் பெற்ற தோல்வி மற்றும் பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் மழையின் குறுக்கீடு என்பன இவ்வணிக்குரிய சுப்பர் சிக்சஸ் வாய்ப்பை இழக்கவைத்தது.

கென்யாவிடம் அதிர்ச்சித் தோல்வியைப் பெற்ற இலங்கையணி, லீக் போட்டிகளில் பெற்ற 4 வெற்றிகள் மூலம் சுப்பர் சிக்சஸ் இனுள் நுழைந்தது. இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளிடம் தோல்வி கண்டாலும் இது அரையிறுதியினுள் நுழைந்தது, மீண்டும் அவுஸ்திரேலியா அணியிடம் தோல்வி கண்டு வெளியேறியது.

டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற ஏனைய அணிகளை விட சிறப்பாக செயற்பட்ட, டெஸ்ட் அந்தஸ்துப் பெறாத கென்ய அணி இலங்கை, சிம்பாபே, பங்களாதேஷ் அணிகளை இலகுவாகத் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்து பல கிரிக்கட் ரசிகர்களை தன்வசப்படுத்திக் கொண்டது.

ஏனைய அணிகளில் நமீபியா வின் ஏ ஜே பேர்கர், கனடாவின் டேவிட்சன், ஒல்லாந்தின் குளோப்பன் பொக், வான் நோட்விஜ்க் போன்றோர் சகலதுறைகளிலும் சிறந்த பங்களிப்பை வழங்கி ரசிகர்களை புருவம் உயர்த்தச் செய்தனர்.

ஊக்க மருந்துப் பாவனைக்காக ஷேன் வோன், எலும்பு முறிவினால் யொன்டி ரோட்ஸ் போன்றோரின் வெளியேற்றம் ரசிகர்களுக்கு கவலை தந்தது உண்மையே.

ஆபிரிக்க ஆடுகளங்கள், பந்து வீச்சுக்கு மட்டும் சாதகமாயிராமல் துடுப்பாட்டத்திற்கும் உதவிபுரிந்தன என்பது 22 பந்துவீச்சாளர்கள் கைப்பற்றிய 10 இற்கும் மேற்பட்ட விக்கட்டுக்கள் மூலமும், 17 துடுப்பாட்ட வீரர்கள் பூர்த்தி செய்த 21 சதங்கள் மூலமும் நிரூபணமானது. 673 ஓட்டங்களைப் (1 சதம், 6 அரைச்சதங்கள் அடங்கலாக) பெற்ற சச்சின் டெண்டுல்கர் உலகக் கிண்ணப் போட்டித் தொடரொன்றில் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற துடுப்பாட்டக்காரரானார். சமிந்த வாஸ் உலகக் கோப்பைத் தொடரொன்றில் அதிகமான 23 (1 ஹட்ரிக் அடங்கலாக) விக்கட்களைப் பெற்ற பந்து வீச்சாளரானார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 34

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | 4 | 5 |
| | ■ | | ■ | | ■ | 6 | |
| 7 | | | ■ | | 8 | ■ | |
| | | | | | 9 | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | ■ | 15 | | | |
| 16 | | ■ | 17 | | | | ■ |
| | ■ | 18 | | | ■ | 19 | |

முடிவுத் திகதி :31.08.2003

பெயர் :..........................

..........................

விலசம்:..........................

..........................

கையொப்பம்:..........................

### இடமிருந்து வலம்.

01. மக்களுக்கு முகக்கவசம் அணிவித்த வியாதி
03. வண்ணத்துப் பூச்சிகளுக்கு மிக விருப்பமான வண்ணங்களிலொன்று (திரும்பி)
06. மனிதர்களிடத்தில் வேறுபடுவதால், குற்றச் செயல்களில் தடயமாகக் கொள்ளப்படுவது (திரும்பி)
07. போப்பாண்டவரின் நகரம் (குழம்பி)
09. மதுவகைகளில் ஒன்று (திரும்பி)
11. அழிவின் எதிர்ப்பதம் (குழம்பி)
13. தலையில் எலும்புகள் நீண்டு, கொம்பாகவரும் ஒரே விலங்கு
14. உலகப் பிரசித்திபெற்ற இடதுகைத் துடுப்பாட்டவீரர்.
15. பறவை/ சோறு
16. இத்தாலியின் தலைநகரம்
17. ஜீவராசிகளில் மிகவும் சுத்தமானது
18. மனிதனை இழிவுநிலைக்கு இட்டுச் செல்லும் குணங்களில் ஒன்று
19. முதுமையில் விழுவது (திரும்பி)

### மேலிருந்து கீழ்

01. இவரது கவலையீனம், பயணிகளுக்கும் பாதசாரிகளுக்கும் பாதகமாகும்
02. ஆப்கானிஸ்தான் போருக்குப்பின் அமெரிக்கர்களை நடுங்க வைத்த நோய் (குழம்பி)
03. பூவைத் தாங்குவது (தலைகீழ்)
04. பிரிவு என்றும் பொருள்படும்
05. மரத்தின் பெயரால் அழைக்கப்படும் நாடு, நதியாலும், உதைபந்தாட்டத்தாலும் புகழ் பெற்றது (குழம்பி)
08. உலகின் மிகவுயர்ந்த வாழ்க்கை முறை கொண்ட ஐரோப்பிய நாடு (தலைகீழ்)
10. .................. வழி வரும் தென்றலின் சுகத்தை கவிஞர்கள் காதலுடன் ஒப்பிடுவர்
12. அரசியல்வாதியாகிவிட்ட அணுசக்தி விஞ்ஞானி
15. அருகாமை
16. 2002இல் ஐரோப்பிய யூனியனால் அங்கீகரிக்கப்பட்டது (தலைகீழ்)
17. மிக நுட்பமான மோப்ப சக்தியுடைய மீனினம்.

# உலக பொலீஸ்காரனும் இலங்கைப் பிரச்சனையும்

- இலிகிதன்.(02.06.2003)

உலக பொலீஸ்காரனாக விரும்பிய அமெரிக்கா இன்று பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற கோஷத்தைக் கையிலெடுத்துக் கொண்டதன் மூலம் உலகின் தாதாவாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையை கேள்விக்குறியாக்கியுள்ளது. ஏனைய நாடுகளின் எதிர்ப்பை அது சட்டைசெய்யவில்லை.

ஆப்க்கான், ஈராக், அடுத்து ஈரான்,சிரியா,வடகொரியாவா?

ஒசாமாவை பிடிக்கப்போவதாகக்கூறி ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியை மாற்றியது. ஆனால் ஒசாமா எங்கே? பிடிபட்டாரா? உயிருடனிருக்கின்றாரா? இக்கேள்விக்கு இன்னும் விடையில்லை. அதேபோல் ஈராக் அணுவாயுதம், உயிர்க் கொல்லி ஆயுதங்களை வைத்திருக்கின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி ஈராக்கை வலுவாக சண்டைக்கிழுத்து சதாமை தலைமறையச் செய்த அமெரிக்கா இன்றுவரை சதாமை கண்டுபிடிக்கவுமில்லை, எவ்வித ஆயுதங்களையும் உலகிற்கு காட்டவுமில்லை. மாறாக இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி ஈராக்கின் எண்ணெய் வளத்தை சுரண்டும் முற்சியில் ஈடுபட்டுள்ளது. சிரியாவும் ஈரானும் பயங்கரவாத்தில் ஈடுபடுகின்றன, ஈரான் அல்கைதாக்களை தன் நாட்டில் வைத்திருக்கின்றது என்று கூறியவாறு வடகொரியாவின் அணுவாயுதத்திட்டத்தை எதிர்த்துக்கொண்டிருக்கின்றது.

செப்டம்பர் 11 இல் அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல் உலகை உலுக்கியதோ இல்லையோ அமெரிக்காவின் உலகையாளும் கனவை உலுக்கிவிட்டுள்ளது என்பதே சாலப் பொருந்தும். எங்கே? எப்போது? எப்படித் தொடங்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இத் தாக்குதல் பிள்ளையார்சுழி போட்டுக்கொடுத்து விட்டது.

இவ்வாரம்பம், தெரிந்தோ தெரியாமலோ இலங்கையில் தமிழர் பிரச்சனையிலும் பல திருப்பு முனைகளை ஏற்படுத்தி யிருக்கிற தென்பதை தூரநோக்கர்களும், தீர்க்க தரிசிகளும் புரிந்து கொள்ளாமலில்லை. பல தசாப்தங்களைக் கடந்து புதிய திருப்பங்கள் கண்ட தமிழர் உரிமைப் போராட்டத்தை ஆயுத வழியிலிருந்து திருப்பி சமாதானம் எனும் போர்வை அணியவைத்து ஒன்றரையாண்டுகள் பேச்சு வார்த்தையை அரங்கேற்றி திடமான எந்த முடிவுகளும் எட்டப்படாமல் இப்போது இடைக்கால நிர்வாகசபை இழுபறியில் நிற்கவைத்துள்ளது.

வீம்புக்கு நின்ற விடுதலைப்புலிகள் விறைப்பை நீக்கி விட்டுக்கொடுத்து நடந்து கொண்டிருக்க, மறுபுறம் சமரசம்/சமாதானம் செய்யும் முயற்சியிலீடுபட்டுக்கொன்டிருக்கும் அரசதரப்பை, எதிர்க்கட்சியாக இருந்தால் அரசு செய்யும் எந்தச்

செயலையும் எதிர்க்க வேண்டும் என்ற கொள்கையுடன் எதிர்க்கட்சி வரிசையில் நின்று பொ. ஐ. முன்னணியும், ஜே.வி. பி யும் குழப்பி நிற்க, நகமுடைந்த புலியாகவுள்ள அதிகாரத்திலுள்ளவர் தான் இழந்ததை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டு அரசின் முன்னெடுப்புக்களை எதிர்த்தவண்ணம் அமைதியை கேள்விக் குறியாக்கிக் கொண்டிருக்கின்றார். இடைக்கால நிர்வாகசபையை வழங்க அரசுக்கு அதிகாரமில்லை எனக் கூறிக்கொண்டு அபிவிருத்தி லொத்தர் சபையைத் தான் கையேற்றுள்ளார்.

> ஒண்றரையாண்டுகள் அரங்கேறிய பேச்சு வார்த்தை திடமான எந்த முடிவையும் எட்டாமல் இடைக்கால நிர்வாகசபை இழுபறியில் நிற்கின்றது.

மேலோட்டமான பார்வைக்கு இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ளது போல் தோன்றினாலும் இவ்வமைதி/சமாதானம் இன்னும் ஆணிவேர் விடாத பூண்டாகவே உளளது. இப் பூண்டு ஆலமரம்போல் விழுதுவிட்ட மரமாகவேண்டும் என்பதே அன்றாடம் அல்லல் பட்ட அபலைகளின் வேண்டுகோளாகவிருக்கின்றது. தவிர இதை பூண்டாகவே வைத்திருப்பதில் ஒருசில தரப்பினரும், பூண்டோடு அழிப்பதற்கென்றொரு கூட்டமும் உள்நாட்டில் நாட்டங்கொண்டிருக்க, அயலவர்களும் வல்லவர்களும் இதை நசுக்கிவிடவேண்டும் என்று இரும்புப் பாதங்களுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

> இரு தரப்புக்கும் உரிய அழுத்தத்தை கொடுத்து தீர்வினைக் காண தூண்டாமல் ஒருதலைப்பட்சமாக அழுத்தம் கொடுப்பது ஆரோக்கியமான விடயமாக இல்லை.

இரண்டாண்டுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இலங்கையின் சமாதான முயற்சி, முதல் சுற்றில் 6ம் கட்டம் வரை பேச்சுவார்த்தை நடைபெற்றும், அடிப்படைப் பிரச்சனைகளுக்கு கூட/புரிந்துணர் உடன்படிக் கையில் ஏற்றுக் கொள்ளப் பட்ட விடயங்களுக்குக்கூட தீர்வினைக் காணாமல் தழுதழுத்துக் கொண்டிருக்கின்றது.

> இலங்கையில் ஆதிக்கத்தை செலுத்துவது யார்? என்ற போட்டியில் வல்லரசுகள் மண்டியடிக்கின்றன.

எப்படியாவது இரண்டு தரப்பையும் ஒரு தீர்வுக்கு கொண்டு வந்துவிட வேண்டும் என ஏற்பாட்டாளர் NORWAY முயன்று கொண்டிருக்க ஏனைய நாடுகள் முயற்சியின் ஸ்தம்பிதத்துக்கான காரணத்தை கண்டறிந்து பேச்சைத் தொடர, இரு தரப்புக்கும் உரிய அழுத்தத்தை கொடுத்து தீர்வினைக்காண தூண்டாமல் ஒருதலைப்பட்சமாக அழுத்தம் கொடுப்பது ஆரோக்கியமான விடயமாகத் தெரியவில்லை. இச் செயற்பாடானது உண்மையில் சமாதானத்தின் மூலம் பலனடைந்துள்ள சாதாரண பொதுமக்களின் வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டிருக்கின்றது.

இருவேறு கட்சியின் பிடியில்

இலங்கையின் அரசியல்களம், வடக்கில் புலிகள், இராணுவம் பலப்பரீட்சை செய்யும் நிலையில், கிழக்கு தமிழருக்கா? முஸ்லிம்களுக்கா? என்றொரு போட்டி வடகிழக்கலகே உருப்பெறாத நிலையில தென்கிழக்கலகு கோஷம் வேறு. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இயற்கையும் தன் பாட்டுக்கு இலங் கையில் ஒ ரு பகுதியி ல் ஆ திக்கத் - தை த செலுத்த வேண்டும் என்ற முனைப்புடன் வெள்ளம், மண்சரிவின் மூலம் உயிர், உடமைகளை காவு கொண்டு தன்னாதிக்கத்தையும் நிலைநாட்டியுள்ளது. இலங்கையின் நிலைமை இவ்வாறிருக்க ஸ்திரமற்றுக் காணப்படும் இலங்கை அரசியல் சூழ்நிலையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொன்டு எதிர் காலத்தில் இலங்கையில் ஆதிக்கத்தை செலுத்துவது யார்? என்ற போட்டியில் வல்லரசுகள் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றன.

> உலக பொலீஸ்காரனாக விரும்பிய அமெரிக்கா இன்று உலகின் காகாவாகியள்ளக.

இலங்கையைப் பொறுத்தவரையில் இது எத்தரப்புக்கு சாதகமாக அமையப் போகின்றது என்பதே பிரதான கேள்வியாகும்.

அல்கைதாவை கூறிக்கொண்டு அரபுநாடுகளையும் அணு, உயிரியல் ஆயுதங்களைக் கூறிக்கொன்டு ஏனைய நாடுகளையும் படியவைக்கும் தந்திரோபாயத்தை கையில் எடுத்து பயங்கர-வாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற கோசத்தின்மூலம் தனக்கு அடிபணியாத நாடுகளை காலடியில் வீழ்த்திக்கொண்டு இருக்கும் அமெரிக்காவிற்கு உலகையாளும் தன் கனவை முழுமையாக்க இலங்கையில் காலூன்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் இருக்கின்றது. இதை அடிப்படையாகக் கொண்டே தன் செயற்பாட்டை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. மனி-தாபிமான உதவி, கடன் என்பதையெல்லாம் விட இராணுவ உதவி (இராணுவ பயிற்சி, உபகரண விநியோகம்) என்ற அடிப்படையில் இலங்கையில் தளமமைத்து காலூன்றவே இது முனையலாம். இதுவே இதன் உலகையாளும் வியூகத்திற்கு உரமிடும். காலப்போக்கில் இதற்காக என்னவிலை கொடுக்கவும் தயங்காது. இதனால் பாதிக்கப் படப்போவது யார்? என்பதே தற்போதைக்கு விடை காணப்பட வேண்டிய கேள்வியாகும்.

**சமாதானம் மலரட்டும் !**

> மலை ஏறினான்
> மிக ஜாக்கிரதையாக....
> தற்கொலை செய்வதற்கு!
>
> கண்ணா

## பல்கலைக்கழகச் சீர்திருத்தங்கள்

-திரு வீ. காண்டீபன

(சென்ற இதழ் தொடர்ச்சி.....)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய கல்விச்சீர்திருத்த ஆணைக்குழு ஆகியன இதுபற்றிய திட்டங்களை பல்வேறு வழிமுறைகளூடு அமுல்படுத்த முனைகின்றன அவையாவன :

1. பல்கலைக்கழக அனுமதி முறைமையை விரிவுபடுத்தி பல்வேறு படிமுறைகளூடு மாணவரை அனுமதித்தல்
2. பல்கலைக்கழகக் கல்வியை பலதுறைகளூடாக விரிவுபடுத்தல்
3. பாடவிதானங்கள், பயிற்சி நெறிகளை பன்முகப்படுத்தல்
4. தம்தேவைகளுக்கு பொருந்துமாறு குறித்தொதுக்கிய துறையைத் தேர்வு செய்யும் வசதியை மாணவர்களுக்கு அளித்தல்
5. குறுகியதும், பலதரப்பட்டதுமான நிபுணத்துவம் சார்ந்த பயிற்சி நெறிகளை ஆரம்பித்தல்.
6. உயர்கல்வி நிறுவனங்கள் தம்மிடையே ஒருங்கிசைவாகவும் ஒன்றியைந்தும் இயங்குவதற்கு வழி ஏற்படுத்தல்.
7. பாடநெறிகளை ஒரே காலத்திலும், ஒரே திட்ட வழிமுறைக்கேற்பவும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாணவரின் தேவை மற்றும் விருப்பிற்கேற்ப பல்கலைக் கழகங்களிடையே இடம்மாறிப் பாடநெறிகளைக் கற்றல்.
8. உலகளாவிய முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாடவிதான நெறிமுறைகளை இலங்கைப் பல்கலைக் கழகங்களில் நிறுவுவதன் மூலம் உலக அறிவு வளர்ச்சி நிலையோடு இசைந்து செல்லுமாறு தயார்படுத்தல்.
9. கற்பித்தல் பொறுப்பை மற்றைய மூன்றாம் நிலைக்கல்வி, அரச நிறுவனங்களுக்கும் அங்கிகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கும் பரவலாக்கம் செய்வதன் மூலம் பல்கலைக் கழகங்களின் வினைத் திறனை அதிகரிப்ப தோடு பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி தரக்கட்டுப்பாடு ஆகிய விடயங்களில் கூடிய கவனம்செலுத்தும் நிலையை ஏற்படுத்தல்.

இவ்வாறான திட்டங்களை அமுல்படுத்துவதற்கான அடித்தளம் ஏற்கனவே இடப்பட்டுவிட்டது

அவற்றில் பல்கலைக் கழகங்களின் கால அட்டவணையை ஒரே

நேரத்திற்கமையுமாறு செய்யப் பட்ட முயற்சிகள், உலகளாவிய ரீதியில் நடைமுறையிலிருக்கும் அரையாண்டு – தரப்புள்ளிச் சராசரி (Semester – Gpy) முறைமையை எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் நடைமுறைக்குக் கொண்டு வந்தமை, பலகாலமாகத் தேங்கியிருந்த மாணவர் அனுமதி மற்றும் கல்வி நடவடிக்கைகளை இரட்டை மாணவர் அனுமதி முதலாய நடவடிக்கைகள் மூலம் சீர்செய்தமை ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறாக இவ்வாறாக நடவடிக்கைகள் பல முன்னெடுக்கப் பட்டுள்ளன. ஆயினும் பல்கலைக்கழக சீர்திருத்தம் என்னும் விடயமானது விசாலமான ஒரு விடயமாகும். இந்நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்காக அதிகளவு நிதி தேவைப்படுகின்றது. பல்கலைக்கழக சமூகத்தினரிடையே இது பற்றிய அறிவு, புரிந்துணர்வு, கருத்தொற்றுமை ஆகியன கட்டியெழுப்பப்பட வேண்டும்.

பல்கலைக்கழக சீர்திருத்தங்கள் தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி இனி ஆராயலாம்.

முதலாவதாக பல்கலைக்கழகச் சட்டவியல் தொடர்பாக நோக்குவதாயின் கடைசியாக யாக்கப்பட்டு சிற்சில சீர்திருத்தங்களேடு இன்றுவரை இயங்குநிலையில் உள்ள சட்டமானது 1978ம் ஆண்டின் 17ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டமாகும். இது பல்வேறு திருத்தங்களுக்கு உட்பட்டது. இப்போது புதியதாக சட்டம் ஒன்று வரையப்பட்டு வருகின்றது. இப் புதிய சட்டம் அடுத்த இதழில் (தொடரும்...)

(21ம் பக்கத் தொடர்ச்சி....)

நூலக சேவைகள், மனித வள முகாமைத்துவம், மாணவர்களுக்கு தொழில் வழங்கும் சேவைகளையும்*(Career Guidance)* வழங்கும் ஊடகமாக விளங்குகிறது,அத்துடன் சமூகத்துடனும், தனியார்துறையுடனும் நல்ல தொடர்புகளையும் பேணிவருகின்றது. இதனால் மாணவர்கள் பட்டப்படிப்பு முடித்து வெளியேறும் போது தகுதிவாய்ந்த நிறுவனங்களில் இலகுவில் உள்வாங்கப்பட்டுவருகின்றனர்.

இராஜேஷ்:- இந்த பயிற்சி திட்டத்தின் மூலம் தாங்கள் பெற்ற அறிவு மற்றும் அனுபவங்கள் வாயிலாக தங்கள் வாழ்க்கையிலே மறக்கமுடியாத நிகழ்வுகளாக எவற்றைக் கருதுகிறீர்கள்?

ஹரிஸ் :- மேற்படி பயிற்சித் திட்டத்தில் இணைந்து நான் கற்றுக்கொண்டவை ஏராளம், பெற்றுக் கொண்ட அனுபவங்களோ தாராளம். அவற்றுள் என் வாழ்க்கையிலே மறக்கமுடியாதவை என பின்வரும் நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

பொதுநலவாயப் பல்கலைக்கழக ஒன்றியத்தினாலும் பிரித்தானிய மன்றத்தினாலும், பல்கலைக்கழக நிர்வாகிகள் ஒன்றியத்தினாலும் இணைந்து கடந்த 12,13ம் திகதிகளில் 'டேர்பி' பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட்ட மூன்று நிர்வாகிகளுள் நானும் ஒருவனாக இருந்தேன். இதன்மூலம் பல்கேரியா, செக் குடியரசு, எரித்திரியா, எத்தியோப்பியா, ஜமேக்கா, மாலாவி, நைஜிரியா, பாகிஸ்தான், போலந்து, ருமெனியா, உகண்டா ஐக்கிய இராச்சியம்,

## கணிப் பொறியின் வரலாறு : ஓர் அறிமுகம்

- விஜிதா, நீ.வணை

**கணனிப் பொறி**

கணிப்பொறி என்பது கணக்கீடுகளையும் (Calculation), கணிப்பீடுகளையும் (Computations) மிகவும் துல்லியமாகவும் வேகமாகவும் மின்னணுவின் (Electronics) கோட்பாடுகளைப் (Principles) பயன்படுத்திச் செயலாற்றும் ஒரு பொறியாகும்.

"கணக்கீடு" : இச் சொல் (Arithmetic) கணக்கீட்டு செயற்பாடுகளையும்,
"கணிப்பீடு" : இச் சொல் "அளவிடுதல்", "மதிப்பிடுதல்" போன்ற செயற்பாடுகளையும் குறிக்கின்றது.

கணக்கீட்டு முறைகளும் கணிப்பீட்டு முறைகளும் தொன்றுதொட்டு, கற்கால மனிதனால் தொடங்கப்பட்டு, இன்றைய கணிப்பொறி தழுவிய முறைகள்வரை படிப்படியாக வளர்ந்து வந்துள்ளன.

மனிதன் முதன்முதலாக வணிகத்தில் ஈடுபட்டபோது கணக்கீட்டுக் கருவியின் தேவையை உணர்ந்தான்.

2000 ஆண்டுகளுக்கு முன் அபேகஸ் (ABACUS) எனும் எளிய கணக்கிடும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒரு செவ்வகச் சட்டத்தில் மணிகள் கோர்க்கப்பட்ட கம்பிகள் பலவரிசைகளில் பொருத்தப்பட்ட ஒரு அமைப்பைக் கொண்டு காணப்பட்டது.

இதனை அடுத்து கி. பி. 1600 ஆண்டுகளுக்குப் பின்னரே பிற கணக்கிடும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1623 ஆம் ஆண்டு வில்ஹெல்ம் (Wilhelm), ஷிக்கார்டு (Hchickard) என்பவர் முதல் எந்திர எண் கணிப்பானான "Mechanical Digital Calculator" ஐக் கண்டுபிடித்தார். இது கூட்டல், கழித்தல் கணக்குகளை தானியக்க முறையில் கணக்கிட வல்லதாக இருந்தது. பெருக்கல், வகுத்தல் கணக்குகளையும் ஓரளவுக்கு தானியக்க முறையில் கணக்கிடக் கூடியதாக இருந்தது.

1623 – 1662 களில் பிலெஸ்பாஸ்கல் (Blaise Baskal) என்னும் அறிஞர் கூட்டல் கழித்தல் செய்யவல்ல ஒரு புதிய வகையான எந்திரக் கணிப்பானை (Mechanical Calculator) உலகிற்கு அளித்துப் பெயர்பெற்றார்.

இதே காலகட்டத்தில் (1630) கலிலியோ என்ற அறிஞர் நழுவுகோல் (Slide rule) என்ற ஓர் கணிப்பீட்டுக் கருவியை கண்டுபிடித்தார்.

**நழுவுகோல் (Slide rule) :**

இது 20ம் நூற்றான்டின் மின்னணுக் கணிப்பான்கள் பயன்பாட்டுக்கு வரும்வரை பொறியியல் கணக்கீடுகளுக்கு பெரிதும் பயன்பட்டது.

**லெபனிஸ் உருளை (Leibaniz Wheel)**

காட்ப்.'.பீடு பில்ஹெல்ம் லெபனிஸ் (Gotfried Wilhelm Leibniz) என்னும் அறிஞர் 1646 – 1716 களில் லெபனிஸ் உருளை (Leibaniz Wheel) எனும் கணக்கிடும் கருவியை கண்டுபிடித்தார். இது இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட கணக்கீட்டுப் பொறிகளின் குறைபாடுகளை நீக்கி கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய 4 எண்கணித இயக்கங்களையும் தானியங்கி முறையில் கணிப்பிடவல்லதாக காணப்பட்டது.

சார்லஸ் பாபேச் (கணிப்பொறிகளின் தந்தை)

கணக்கீட்டுத் துறையில் மிகமுக்கிய வளர்ச்சிகள் ஏற்பட்ட காலகட்டம் 19ம் நூற்றாண்டாகும். 1791 முதல் 1871 வரை வாழ்ந்த சார்லஸ் பாபேச் **(CHARLS BABAGE)** என்னும் கணித வல்லுனர் 1833ம் ஆண்டு Difference Engine (வேறுபாட்டுப் பொறி), Analytical Engine (பகுப்பாய்வுப் பொறி) என்ற இரு கணக்கீட்டுத் தத்துவங்களை வடிவமைத்து இரு பொறிகளை வழங்கினார். இப்பொறிகள் இரண்டும் நீராவித்திறனால் இயக்கப்பட்ட பொறிகளாகும். 20ம் நூற்றாண்டில் மின்னணுத்திறன் கண்டுபிடிக்கப்பட்ட பின் பாபேச் வழங்கிய இத் தத்துவங்களின் அடிப்படையில் மின்னணுக் கணிப்பொறிகள் வடிவமைக்கப்பட்டன. எனவே 'பாபேச் கணிப்பொறிகளின் தந்தை' என வழங்கப்படுகிறார்.

## *கணிப்பொறிகளின் வளர்ச்சி*

### *முதலாம் சந்ததிக் கணணிகள்*

### *01. ENIAC*

பாபேச் வழங்கிய தத்துவத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட முதல் எண்வழி மின்கணிப்பொறி (ENIAC) என்ற கணிப்பொறியாகும். இது 1943 - 1945ம் ஆண்டுகளில் John W. Mauchly என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இது வெற்றிடக் குழல் (Vacuum Tube) என்னும் மின்னணுக் கூறுகளால் அமைக்கப்பட்ட கணிப்பொறியாகும்.

### *02. EDVAC*

1944ம் ஆண்டு வொன் நியூமன் லியூவன் (Von Neumen Luven) என்னும் கணிதமேதை ENIAC கணிப்பொறியிலிருந்து EDVAC என்னும் முதல் தேக்கக் கணிப்பொறியை (A Computer with Store Programme Concept) வடிவமைத்து வழங்கினார். Von Neumen Luven தந்த நிரல் தேக்கத் (Stored Programme) தத்துவத்தின் அடிப்படையிலேயே அதற்குப் பிறகு வடிவமைக்கப்பட்ட அனைத்துக் கணிப்பொறிகளும் உருவாக்கப்பட்டு வருவதால் இக்கணிப்பொறிகளின் கட்டமைப்பு Von Neumen Luven Architecture என அழைக்கப்படுகின்றது.

(தொடரும்)

## ஆய்வு

(சென்ற இதழ் தொடர்ச்சி......)

### ஆய்வின் ஐம்பெரும் பிரிவுகள்

ஒரு சிறந்த ஆய்வானது ஐந்து பெரும் பிரிவுகளை கொண்டதாகக் காணப்பட வேண்டும். அவையாவன.

1. ஆய்விற்கான தலைப்பை தெரிந்தெடுத்தல்
2. எடுத்துக்கொண்ட தலைப்புக்காக குறிப்பினை சேகரித்தல்
3. குறிப்புகளை திறனாய்வு செய்தல்
4. குறிப்புகளை வகைப்படுத்தல்
5. ஆய்வு எழுதுதல். பொதுவாக -

இந்த ஐந்து பிரிவுகளும் ஒரு ஆய்வில் எதிர்பார்க்கப்படும் விடயமாக உள்ள போதிலும் ஆய்வில் உள்ளடக்கப்படும் துறை, விடயம் என்பனவற்றை தவிர வேறு சில ஆயத்த முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் அவசியமாகும். உதாரணமாக புவியியல் சம்பந்தப்பட்ட ஆய்வில் நவீன தொழில்நுட்பத்தில் உள்ளடக்கம், படவடிவிலான உள்ளடக்கம், அட்டவணைகளின் சேர்க்கை என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தல் அவசியமானதாகும். இனி இவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

#### 1. ஆய்விற்கான தலைப்பைத் தெரிவு செய்தல்

ஆய்விற்கான தலைப்பினைத் தெரிவு செய்யும் போது மேற்பார்வைாளருடன் கலந்தாலோசித்து தெரிவு செய்வது நல்லதாகும். சிலவேளை மேற்பார்வையாளரது கருத்து முரண்பட்டிருக்குமானால் ஆய்வினை செய்ய முனைபவர் தனக்கு விருப்பமான துறையில் விருப்பமான தலைப்பை தெரிந்தெடுக்க கூடிய துணிச்சல் இருப்பது அவசியமாகும். ஆய்வாளர் மற்றொருவரின் வற்புறுத்தலுக்குள்ளாகி ஒரு விடயத்தை ஆய்வு செய்ய முற்பட்டால், இடையில் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டிவரும்.

#### 2. எடுத்துக்கொண்ட தலைப்பிற்கான குறிப்பினை சேகரித்தல்

தெரிவு செய்த ஆய்விற்கு தேவையான குறிப்புக்களை முதலாம் நிலை, இரண்டாம் நிலை தரவு மூலகங்களிலிருந்தும் ஆய்வுத் தலைப்பிற்கேற்ற வகையில் ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளைக்கொண்டு ஆய்வினை முன்னெடுத்துச் செல்லலாம்.

#### 3. குறிப்புக்களை திறனாய்வு செய்தல்

ஆய்விற்காக தெரிந்தெடுக்கப்பட்ட குறிப்புகளை திறனாய்வு செய்தல் ஆராய்ச்சியின் முக்கிய பணியாகும். திறனாய்வு செய்யாமல்,மற்றவ

-ர்களிடமிருந்து பெற்ற விடயத்தை அப்படியே ஆய்வில்பிரயோகம் செய்தால், அந்த விடயத்தில் குறிப்பிட்ட ஆய்வாளரது தனித்திறமை இடம்பெறுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போவதையும் காணலாம். குறிப்புகளை திறனாய்வு செய்யும் போது, உண்மையான தனிப்பட்ட விளக்கம் ஆய்வாளருக்கு ஏற்படுகின்றது. அந்த விளக்கத்தை ஆய்வாளர் தூண்டு கோலாக கொண்டு ஆய்வு நடத்துவாராயின் ஆய்வு திறமையானதாக அமையும்.

4. *குறிப்புக்களை வகைப்படுத்தல்*

குறிப்புக்களை வகைப்படுத்தல் என்பது திறனாய்வின் அடிப்படையில் அமைந்த விடயத்தை வகைப்படுத்தலுக்கு உள்ளடக்கப்பட்ட பின்னரே எழுதப்பட வேண்டும் என்பதை குறித்து நிற்கின்றது. குறிப்புக்களை வகைப்படுத்துவதன் மூலம் ஆய்வுகளில் ஒரு ஒழுங்கு முறை பெறப்படுகின்றது.

5. *ஆய்வு எழுதுதல்*

குறிப்புக்களை வகைப்படுத்திய பின்னர் அவற்றை வைத்துக்கொண்டு பல்வேறுபட்ட கணிப்புகளின் மூலம் ஆய்வினை எழுதலாம். பெறப்பட்ட தரவுகள் பரிசீலிக்கப்பட்டு, இறுதி முடிவுகள் பெறப்பட்டு ஆய்வினை எழுதலாம். எமக்குத் தேவையான குறிப்புகள், படங்கள், தரவுகள், விபரங்கள் என்பனவும் எழுதுவதற்கு அத்தியாவசியமாகின்றன. இவ்வாறு பெறப்பட்ட அனைத்து முடிவுகளையும் வைத்துக் கொண்டு, ஆய்வினை எழுதிமுடித்துவிடலாம் எனப் பலர் நினைக்கின்றனர். இது தவறானதாகும்

ஆய்வினை எழுதும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

01 ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விடயம் ஆழமான முறையில் அணுகப்பட்டுள்ளதா என்பதும், அந்த அணுகுமுறை மற்றவர்களுக்கு வழிகாட்டக்கூடியதா என்பதும்.

02. ஆய்வின் கருப்பொருள், பிரச்சினை ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருக்குமானால் அப்பிரச்சினைக்கு தெளிவான தீர்க்கமான முடிவு ஒன்று ஆய்வில் காட்டப்படுகின்றதா என்பதை கவனித்தல்.

03. ஆய்வில் புதிதாக கண்டுபிடிப்புகள் இடம் பெறுவதும் அவசியமாகும். உதாரணமாக ஒரு புதிய தோற்றத்தை கண்டுபிடித்தல், ஒரு மாதிரி உருவினை கையாளுதல், ஒரு புதிய எண்ணக்கருவினை உருவாக்க அதன் அடிப்படையில் ஆய்வினை வழிநடாத்துதல் என்பனவும் அவசியமாகும்.

04. ஆய்வாளன் கூற்று நான், எனது என்று அமையாமல் எப்போதும் பிறவினையாக வரக்கூடிய முறையில் அமைதல் வேண்டும்.

05. ஆய்வு தரமான முறையில் அமையக்கூடிய வகையில் படங்கள், அட்டவணைகள் மேற்கோள்கள், அகக்குறிப்புகள், தொழில்நுட்பங்கள், பிற்சேர்க்கைகள் என்பன இடம் பெற்றிருத்தல் வேண்டும்.
06. ஆய்வில் முன்னுக்கு பின் கருத்து முரண்பாடு இருத்தல் கூடாது. பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் கூட ஆய்வில் ஒரேவடிவில் பின்பற்றப்பட்டிருத்தல் விரும்பத்தக்கதாகும்.
07. ஆய்வில் முன்னுக்கு பின் கருத்து முரண்பாடு இருத்தல் கூடாது. பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் கூட ஆய்வில் ஒரேவடிவில் பின்பற்றப்பட்டிருத்தல் விரும்பத்தக்கதாகும்.
08. இலகுவான வசனநடை, தனித்தனி வசன அமைப்பு, ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனி பந்திகளில் எடுத்துக்கூறுதல், ஒவ்வொரு வசனங்களிலும் கூறப்படும் விடயம் தெளிவானதாக அமைந்திருத்தல், இலக்கண வழுவற்ற தன்மை என்பனவும் முக்கியம்.

## ஆய்வின் பண்புகள்

01. இது ஒரு விஞ்ஞானரீதியான செயற்றிட்டமாகும். அதாவது காரணத்திற்கும் விளைவிற்குமான தொடர்பினை எடுத்துரைத்தல். ஒருபிரச்சினைக்கு அல்லது வினாவிற்கு விடையினைப் பெற வழிவகுத்தல் என்பன ஒரு ஆய்வின் மூலம் வற்புறுத்தப்படுகின்றன.
02. விதிகள், கொள்கைகள், அல்லது கோட்பாடுகள் விருத்தி செய்தல் என்பன ஒரு ஆய்வின் மூலம் வற்புறுத்தப்படுகின்றது.
03. ஆய்வுகள் அவதானிப்பு, அனுபவம், சான்றுகள் போன்றவற்றில் தங்கியிருக்கின்றன.
04. ஆய்வுகள் மூலம் சரியான முடிவும் திடமான பெறுபேறுகளும், தெளிவான விளக்கமும் விபரணமும் பெறப்படுகின்றது.
05. தரவுகள் சேகரிப்பதோடு அவற்றை செயல்முறைக்குட்படுத்தி விளக்கங்களைத் தேடுவதாக ஆய்வுகள் அமைகின்றன.
06. ஆய்வு மேற்கொள்ளப்படும் துறையில் ஆழ்ந்த அறிவினைப் பெற்றுத்தருகின்றது.
07. ஆய்வானது மிகவும் அவதானமாக செயற்படுத்தப்பட்டதாகவும் அறிக்கைகளை உள்ளடக்கியதாகவும் அமைகின்றது.
08. இது பொறுமையுடன் மேற்கொள்ள வேண்டியதாக இருப்பதுடன் தனிப்பட்ட உணர்வுகள், விருப்பு வெறுப்புகள் இடம்பெறாத வகையில் அமைய வேண்டும்.
09. ஒரு குறித்த துறை சார்ந்த அறிவினை விருத்தி செய்வதற்கும், விருப்பமான ஒரு துறையை தேர்ந்தெடுக்கவும் ஆய்வுகள் உதவுகின்றன.
10. ஆய்வுகள் மனிதனது தேவைகளையும், நோக்கங்களையும் நிவர்த்தி செய்வனவாகவே அமைகின்றன. எனவே, ஆய்வின் நோக்கம் மனிதனது பிரச்சினைகளை தீர்ப்பதாகும்.

11. ஆய்வானது சில சந்தர்ப்பங்களில் சலனங்களை எதிர்நோக்க வேண்டியதாக அமைகினறது. அதாவது சில ஆய்வுகளுக்கு சமூக அங்கிகாரம் கிடைப்பதில்லை.

## ஆய்வின் வகைகள்

பொதுவாக ஆய்வினை இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்க முடியும். அவையாவன:

1. இயற்கை விஞ்ஞானம்சார் ஆய்வுகள் 2.சமூக விஞ்ஞானம்சார் ஆய்வுகள்

இயற்கை விஞ்ஞானம் சார் ஆய்வுகள் பெரும்பாலும் ஆய்வுகூட பரிசோதனையுடன் தொடர்புபட்டதாக அமைகின்றது. இது, குறிப்பிட்ட ஆய்வுடன் தொடர்புடைய வெளிக்காரணங்களை கட்டுப்படுத்தி ஆய்வு செய்ய உதவுவதனால் உறுதியான முடிவுகளைக் கூறக்கூடியதாக அமையும்.

உதாரணம் : $C + O = CO$

காபனும் ஒட்சிசனும் தாக்கமுறும் போது காபனீரொட்சைட்டு பெறப்படும்.

சமூக ஆய்வுகள், கோட்பாடுகள், எண்ணக்கருக்கள், உசாத்துணைகள் என்பன சமூக நிலைகளை சார்ந்தவையாக அமைகின்றன. எனவே, இவ்வாவுகள் மனிதனது நடத்தை மாற்றம், மனோநிலை, பொருளாதாரம், நாகரீகம் போன்ற பல காரணிகளின் செல்வாக்குட்பட்டு அமைவதனாலும் இத்தகைய காரணிகளைக் கட்டுப்படுத்தி ஆய்வு செய்ய முடியாமையினாலும் திடமான முடிவுகளைக் கூறமுடியாது.

உதாரணம் : இலங்கையின் இனப்பிரச்சினைக்கான காரணங்களை ஆய்வு செய்வதானால், அவ்வாய்வின் போது சில நடவடிக்கைகளை கட்டுப்படுத்தியே ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.

*சி இளங்கோவன், வாழைச்சேனை*


## பிளாஸ்டிக் பணம்

*- சபிகா வேலப்பன்*

பிளாஸ்டிக் பணத்தை உபயோகிக்கும் நாடுகளின் வரிசையில் மெக்சிக்கோவும் October 2002 இல் சேர்ந்து கொண்டது மெல்ல மெல்ல ரூபாய் நோட்டுகள் இருந்த இடத்தை பிளாஸ்டிக் பணம் ஆக்கிரமிக்கிறது. 'எல் யுனிவர்சஸ்' என்ற பத்திரிகையின்படி ஏற்கனவே இப்பணம் Australia, Brazil, New Zealand, Romania என்பவற்றில் புழக்கத்திலுள்ளது. ரூபாய் நோட்டுக்களை முதலில் சீனர்களே அறிமுகப்படுத்தினர். பிளாஸ்டிக் பணத்தால் பல நன்மைகள் உள்ளன. சுத்தமாக இருக்கும், நான்கு மடங்கு நீடித்து உழைப்பவை, தாக்குப்பிடிக்கக்கூடியவை.

# பண்டைய கால மட்டக்களப்பின் துறைமுகங்களும் கப்பல் போக்குவரத்துக்களும்

மட்டக்களப்பு பேச்சு வழக்கில் மட்டக்களப்பின் எட்டுத் துறைமுகங்கள் என்னும் சொற்றொடர் பாவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அதனை மையமாகக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்டைய கால கப்பல் போக்குவரத்தில் மட்டக்களப்பு துறை முகங்களின் ஆதிக்க செல்வாக்கினை ஆராய்வதை இலக்காகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.



அரேபிய சாம்ராச்சியம் உச்ச நிலையிலிருந்த போது பாக்டாட்டில் வாழ்ந்த அரேபிய சக்கரவர்த்தி ஹரூன் அல்ரஷீத் காலத்தில் (786 – 809) தோன்றிய 'அரேபிய ஆயிரத்தொரு இரவுகள்' என்ற கதைநூல் கற்பனைகள் நிறைந்த ஓர் நூலாயிருந்த போதிலும் அராபிய வணிகர்களும் போர் வீரர்களும் கேட்டறிந்த பல செய்திகளின் அடிப்படையில் பல கதைகளை அந்நூலாசிரியர் புனைந்துள்ளார். இதில் வரும் 'சிந்து பாத்தின் யாத்திரைகள்' என்ற கதையில் மட்டக்களப்பு துறை முகங்கள் சிலவற்றின் பெயர்கள் காணப்படுகின்றன.

அந்நூலின்படி மட்டக்களப்பு பிரதேசத்தில் 'அகில்' என்னும் வாசனைப் பொருளைத் தரும் கள்ளி வகைகளை சேர்ந்த செடிகள் எதேச்சையாக வளர்ந்து கிடந்தன. இந்த வாசனைப் பொருட்களை வாங்கிச் செல்வதற்காக மட்டக்களப்பு பிரதேச துறை முகங்களுக்கு அரேபிய மாலுமிகள் வந்தனர். அகில் ஏற்றுமதி செய்யும் துறைமுகங்கள் கோமாரி, சன்வு, காகுலி, காளாஞ்சி என அந்நூல் கூறுகின்றது.

கோமாரி என்ற பெயர் மாற்றமின்றி இன்றும் வழங்கி வருகின்றது. காளாஞ்சி என்பது இப்பொழுது களுவாஞ்சி எனப்படுவதாக இருக்கலாம். சன்வு, காகுலி என்பன அடையாளம் காணப்படவில்லை.

மேலும் இலங்கைக்கு வருகை தந்த ஒல்லாந்தன் ஸ்பில் பேர்கன் 31.05.1602ல் மட்டக்களப்பு துறை முகத்தில் இறங்கியபோது மட்டக்களப்பு சுதேசிகள் துறை முகத்திற்கு அருகில் கப்பல்களைக் கட்டிக் கொண்டிருந்ததைக் கண்டதாக குறிப்புக்கள் உள்ளன. இதனை விளக்கும் வகையில் போத்துக்கேய பாதிரி குவிறோஸ் குறிப்புக்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்படி மட்டக்களப்பு துறைமுகம் குடாக் கடலாக அமைந்துள்ளது எனவும் கடலிருந்து வாவிக்குள் செல்லும் வழி ஆழமானது எனவும் வாவியின் ஓரங்களில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்தனர் எனவும் வாவியினூடாக புளியந்தீவினை அடைந்து அங்கு பொருட்களை இறக்க வசதிகள் செய்யப்பட்டிருந்தன எனவும் இவ் இறங்கு துறைக்கு அருகில் ஒல்லாந்தர் பெரியதொரு பண்டக சாலையை கட்டியிருந்தனர் எனவும் அங்கு பொருட்கள்

சேகரிக்கப்பட்டிருந்தன எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் கப்பல் போக்குவரத்தினை எடுத்து நோக்குகையில் 1888ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29ம் திகதி அன்றைய அரசாங்கம் முதன் முறையாக தீவைச் சுற்றிலும் ஒரு கப்பற் சேவையை ஆரம்பித்து வைத்தது. இதன்படி கொழும்பிலிருந்து புறப்படும் கப்பல்கள் காலி, அம்பாந்தோட்டை, கல்குடா, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் தங்கி மீண்டும் கொழும்பு திரும்பின.

இவ்வாறான கப்பல் போக்கு வரத்துக்கு முதன்முதலாக இலங்கையில் உபயோகிக்கப்பட்டது இங்கிலாந்தில் இருந்து கொண்டு வரப்பட்ட லேடி கோர்டன் கப்பலாகும். இதைத் தொடர்ந்து 300 தொன் எடையுள்ள இன்னும் பல கப்பல்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டன. அவற்றில் தமிழருக்குரிய கப்பலாக மாருதப்புரவீகவல்லி காணப்படுவதுடன் 1897ல் மட்டக்களப்புக்கு மேற்கேயுள்ள கடலில் பாறையில் மோதி விபத்துக்குள்ளாகிய லேடி கோர்டன். 1907ம் ஆண்டு கல்குடாவுக்கு அருகே சூறாவளி நிமிர்த்தம் சேதமான லேடி ஹெப்லொக் கப்பல். 1926ம் ஆண்டு கல்குடா துறைமுகத்தை விட்டு வெளியேறிய போது விபத்தான லேடி மக்கலம் கப்பல் போன்ற பல கப்பல்கள் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்புக்கும் ஏனைய இடங்களுக்குமான கப்பல் போக்குவரத்து எனும்போது போத்துக்கீசர் காலத்தில் கிழக்கத்திய கம்பனி நடைமுறையிலிருந்தபோது கோவா போன்ற இடங்களிலிருந்து கட்டடப் பொருட்கள், ஓடு முதலியன இந்தியாவிலிருந்து கடல் மூலமே வரவழைக்கப்பட்டு உரு என்றழைக்கப்படும் சிறு கப்பல்கள் மூலம் முகத்துவாரமூடாக கச்சேரியை அண்மித்து வந்து (தற்போது நூலகம் அமைந்திருக்கும் பகுதியில்) பொருட்களை இறக்குவது வழக்கம். அங்கு நிலை கொண்டிருந்த சங்கிலி கட்டப்பட்டிருக்கும் சாதனம் இப்பொருட்ளை கரைக்கு தூக்கி வைக்கும் சாதனமாகும். இந்த இடம் 'றேகடி' என அழைக்கப்பட்டது.

இக் கப்பல் போக்கு வரத்தில் மட்டக்களப்பிலிருந்து புறப்படும் சிறு கப்பல் காத்தான்குடி, ஆரையம்பதி, மண்முனை, அம்பிளாந்துறை, களுதாவளை, பட்டிருப்பு, மண்டூர் ஆகிய இடங்களைக்கடந்து கல்முனையிலுள்ள கிட்டங்கி என்னும் இடத்தை அடையும். அங்கு கப்பல் வந்ததும் பெரியதொரு ஒலி எழுப்பப்படும். இதையறிந்த வணிகர்கள் தம் வியாபார பொருட்களான மான்கொம்பு, மான்தோல், யானைத்தந்தம், சித்தாமட்டி, பேராமட்டி, பேய்ப்புடலை, பற்படாகம், அணுங்கு ஓடு, முள்ளம்பன்றி முள் என்பனவற்றைக் கொண்டுவந்து ஏற்றுவார்கள். இவ்வாறக மட்டக்களப்புக்கு கொண்டுவரப்பட்ட பொருட்களுடன் நெல், அரிசி, வைக்கோல், தேங்காய், கொப்றா, நெய் முதலிய பொருட்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் யாழ்ப்பாணத்திற்கும் அங்கிருந்து

தமிழ் நாட்டுக்கும் சென்றன.

இக் கப்பல் சேவையினை 1891ம் ஆண்டு ஒகிரெடி என்பவர் ஆரம்பித்தார் என 'மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை' என்னும் நூலாசிரியர் ஏ. மஜீத் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

அடுத்து மட்டக்களப்பின் வடதிசையின் கல்குடா துறைமுகம் பற்றி எடுத்து நோக்குகையில் அதனை 'வாழைச்சேனை ஸ்ரீ கைலாசபிள்ளையார் ஆலய வரலாறு' எனும் நூலாசிரியர் திருமதி. சி. ப. தங்கத்துரை கூறுவதைக் குறிப்பிடுவது நலம். இதன்படி ஈழநாட்டின் கீழ்த்திசையில் இந்து சமுத்திரா தேவியின் அலைக்கரங்கள் அலசி விளையாடும் கற்குடாவென்னும் இயற்கை துறைமுகமுள்ளது. இதன் வழியாகவே கிழக்கின் வியாபார போக்கு வரத்துக்கள், அரசியல் குடியேற்ற போக்கு வரத்துக்கள் கிராமத்தின் பல்வேறு அபிவிருத்திகளும் நடைபெற்றன. அக்காலத்தில் இத்துறைமுகம் கிழக்கு மாகாணத்தின் சிரம் போல் விளங்கியது என்கிறார்.

ஆரம்பகாலத்தில் சீனர்கள் கற்குடா துறைமுகத்தில் வந்திறங்கி அங்குள்ள வாடிவீட்டில் தங்கியிருந்து தரமான பட்டு, பருத்தித் துணிகள், வாசனைத் திரவியங்கள், பொம்மை முதலிய விளையாட்டுப் பொருட்களையும் வேறு பாவனைப் பொருட்களையும் வீடு வீடாகச் சென்று வியாபாரம் செய்து வந்தனர். இதற்கு முன் சீன பல் வைத்திய பெண்கள் வீடு வீடாகச் சென்று பல் வைத்தியம் செய்த செவி வழிச் செய்திகளுடன் தனது பெற்றோர் கூறிய செய்திகளையும் இங்கு ஆசிரியர் கூறுகின்றார்.

மேலும் இந்தியா முதலிய அயல் நாடுகளிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பல வகையான வியாபார பொருட்களை ஏற்றிக் கொண்டு உருக்கள் என சொல்லப்படும் பெரிய அளவிலான பாய்த் தோணிகள் கல்குடா துறை முகத்தின் மூலமாக மது, ஓயா ஆற்றின் வழியே வந்து வாழைச்சேனை தபாற்துறையில் தங்கி ஏற்றி வந்த பொருட்களை இறக்கி இங்கிருந்து தேங்காய், கொப்ரா, நெல், அரிசி, சோளம், பசுநெய், தேன், யானைத் தந்தம், மான் கொம்பு, மான் தோல், மரங்கள், மரப்பலகைகள், தளபாடங்களையும் ஏற்றிச் செல்லும் எனக் கூறுவதுடன் உருக்களில் தேங்காய்களை ஏற்றுவோர்வரிசையாக ஆற்றங்கரையில் நின்று ஒருமித்த குரலில் ஏலொவேலோ என்று ஒலி செய்ய உருக்களில் தேங்காய்களை எறியும் காட்சியை சிறுவர்கள் ஆவலுடன் கண்கொட்டாமல் பார்த்து நின்று ரசிப்பர் எனவும் அத்துடன் ஆறெங்கும் தினமும் மீன்பிடி வள்ளங்களிலிருந்து சிறு சிறு தோணிகளிலிருந்தும் எழும் இரவு நேர வெளிச்சங்களும் பகல்வேளை போக்கு வரத்துக்களும் ஆற்றையே அலங்கரித்துக் காட்டும் என்கிறார்.

எனவே மட்டக்களப்பு மாவட்டம் துறைமுகங்களையும் கப்பல் போக்கு வரத்துக்களையும் கொண்டு காணப்பட்டமையினை உணரக் கூடியதாகவுள்ளது.

*கே. எஸ். சிவகுமார், கலாசார உத்தியோகத்தர் ,கோறளைப்பற்று*

## குறுக்கெழுத்துப் போட்டி விடை இல:33

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சை | ப | ர் | போ | பி | யா | | தா |
| கை | | பா | தி | | வா | ம | ர |
| | வே | | | சோ | டி | ய | ம |
| ம | ர் | லி | ன் | | | ர | |
| ணி | | ர் | | | ம் | வி | ஷ |
| ப் | | ப | | பு | ய | | ங் |
| பு | ல | ம் | | ன் | ரி | க | கா |
| ரி | க் | கி | | த | பே | | ய் |

சென்றமுறை வெளியான குறுக்கெழுத்துப் போட்டி இல. 33 இற்கு விடையெழுதியவர் ஒருவர் மாத்திரமே. இவர் சரியான விடையினை எழுதி முதல்பரிசைப் பெற்றுள்ளார்.

திரு. ஏ. எச். எம் அமீன்
இல. 11, காதியார் வீதி
ஏறாவூர்.

## தகவல் தொடர்பு

– ஷேகான்

தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை, உலகஅளவில் தொழில்நுட்ப நாடுகள், குறைந்த தொழில்நுட்ப நாடுகள், தொழில்நுட்பமே இல்லாத நாடுகள் எனும் இரு பெரும் பிரிவினை தற்போது உருவாக்கியுள்ளது. உலகளவில் தகவல் புரட்சி வலைப்பின்னல் நாளுக்கு நாள் படர்ந்து விரிந்து வருகின்ற போதிலும் இப்போக்கு, ஒரு சில நாடுகளிலேயே பெரும் பகுதியாக மையமிட்டு நிற்கின்றது. உலக மக்கள் தொகையில் 15% ஐ கொண்டுள்ள தொழில்மய நாடுகளில், 88% மக்கள் இண்டர்நெட் வசதி யைப் பயன்படுத்தும் அதேவேளை, மக்கள் தொகையில் 20% பெற்றுள்ள தெற்காசியாவில் ஒரு சத விகித மக்களே இப்பயனைப் பெற்றனர். முழு ஆபிரிக்காவையும் விட, தாய்லாந்தில் அதிகளவில் செல் போன்கள் உள்ளன. உலக நாடுகளில் இருக்கும் கம்பியூட்டர்களைவிட, அமெரிக்கா அதிகளவில் கம்ப்பியூட்டர்களைக் கொண்டுள்ளது.

இன்டர்நெட் தொடர்பான ஆய்வில் பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

01. கம்பியூட்டர் மற்றும் இன்டர்நெட் போன்றவை, உயர் வருமானம் கொண்ட நாடுகள் மற்றும் மக்களிடையேதான் பெரிதும் பயன்பாட்டில் உள்ளன.
02. கம்பியூட்டர் பயன்படுத்துபவரில் பெரும் பகுதியினர் கல்வியறிவு பெற்றவர்களே. பிரிட்டனில் 50% பட்டப்படிப்பு முடித்தவர்கள். சீனாவில் 68% இது ஆகும்.
03. பயன்பாட்டாளர்களில் பெரும் பகுதியினர் இளைஞர்களே அதிலும் ஆண்களே அதிகம்
04. ஆங்கிலமே 80% வெப் சைட்களில் பயன்படுத்தப் படுகின்றது.

இப்புத்தகத்திற்கான தட்டச்சு, வடிவமைப்பு வேலைகளைச் செய்தவர்கள் *செங்குந்தர்வீதி, ஆரையம்பதி - 02 இலுள்ள* ***'மெகா கொம்பியூட்டர்'*** நிறுவனத்தினர்.
தொடர்புக்கு 065-47323

கிழக்கொளிக்கான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. உங்களது ஆக்கங்களை காலதாமதமின்றி எமது ஆசிரியர் பீடத்திற்கு கிடைக்கத்தக்க வகையில் (முதலாம் பக்கத்திலுள்ள முகவரிக்கு) அனுப்பி வையுங்கள். தரமானவை (சிறுகதை, தொடர்கதை, கவிதைகள், கட்டுரைகள், .........) இடம்பிடிக்கும்.

ஆசிரியர்-

சிம்பாவே போன்ற நாடுகளிலிருந்து கலந்துகொண்ட துணை வேந்தர்களுடனும் பதிவாளர்களுடனும் மற்றும் நிர்வாக அதிகாரிகளுடனும் என்னால், என்னைப் பரிமாற்றம் செய்து கொள்ள முடிந்தது.

அடுத்து, பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்த வேளையில் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்களின் ஒன்றியத்தின் வருடாந்த மாநாட்டிலும், *Oxford* பல்கலைக்கழகத்தினை தரிசிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இப் பல்கலைக்கழக மூத்த நிர்வாகிகள் பலரையும, சில கல்லூரி நிர்வாகிகளையும், (*College Administrators*) சந்தித்து அவர்களுடன் நெருங்கிப் பழகிய அந்த ஒரு சில மணி நேரங்கள் உண்மையில் புதியதோர் அனுபவ சுகத்தை எனக்கு அள்ளித் தந்ததெனலாம். *Oxford* பல்கலைக்கழகம், அதனுடன் இணைந்த 39 கல்லூரிகளில் 30,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர்.

இராஜேஷ்:- இறுதியாக, மேற்படி பயிற்சியின் போது பெற்றிருந்த அறிவு மற்றும் அனுபவங்கள் ஊடாக, கிழக்குப்பல்கலைக்கழக நிர்வாக அபிவிருத்திக்கு எத்தகைய பங்களிப்பினை தங்களால் வழங்கமுடியுமென நீங்கள் கருதுகிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்துவீர்களா?

ஹரிஸ்:- ஆம், இப்பயிற்சித்திட்டத்தின் மூலம் நான் பெற்றுள்ள அனுபவங்களை அடிப்படையாக வைத்து பல்கலைக்கழக பேரவையின் (*University Council*) ஒப்புதலுடன் ஊழியர் வினைத்திறன் (*Efficiency*) மற்றும் உற்பத்தித்திறன் (*Productivity*) விருத்திக்கான சில மாற்றங்களை உட்புகுத்தி பல்கலைக்கழக வளர்ச்சியின் மேம்பாட்டிற்காக அவற்றைப் பயன்படுத்தலாம் என உத்தேசித்துள்ளேன்.

*'Manchester'* பல்கலைக்கழகத்தில் அனைத்து பௌதீக, மனித வளங்களும் (*Physical & Human Resources*) ஒருமுகப்படுத்தப்பட்டு (*Pooling System*), பல்கலைக்கழக கல்விசார், மற்றும் நிர்வாக செயற்பாடுகள் செவ்வனே நடைபெற்று வருவதைப் போன்று இங்கும் அறிமுகப்படுத்துவதன் மூலம் எமது பல்கலைக்கழக அபிவிருத்திக்கும் வழிகோலாம் என நினைக்கிறேன். மேலும், வளங்களைப் பகிர்ந்து கொள்ளல் (*Sharing resources*), சேதாரக் குறைப்பு (*Waste Reduction*) மூலமும், மற்றும் பட்டதாரி மாணவர்களிடமிருந்தும், ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்தும் வசூலிக்கப்படும் கற்கைக் கட்டணம் மூலமும் நிதி உருவாக்கம் (*Generating Income*) நடைபெறுகிறது. இத்தகைய நிதி திரட்டல் நடவடிக்கைகள் மூலம் இப் பல்கலைக்கழகமானது ஏனைய நிதிவழங்கும் நிறுவனங்களில் தங்கியிருக்காது (*Funding Agencies*), தனது பௌதீக, மனித வளத் தேவைகளை (*Physical & Human Needs*) இலகுவில் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் உள்ளது. இத்தகையதொரு மாறறத்தை எமது பல்கலைக்கழகத்திலும் உட்புகுத்துவதன் மூலம் செம்மையான முறையில் எமது நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்பது எனது நம்பிக்கையாகும்.

இராஜேஷ்:- இப்பேட்டியில் பயனுள்ள பல விடயங்களை அறியத் தந்தமைக்கு கிழக்கொளி ஆசிரியர்குழு சார்பாக எனது மனமார்ந்த நன்றிகள்!.

ஹரிஸ் :- இச் செவ்வி மூலம், 'பல்கலைக்கழக முறைமை மற்றும் நிர்வாகம்' பற்றிய பயிற்சியின் போது நான் பெற்றிருந்த அனுபவங்களை கிழக்கொளி வாசகர்களுக்கு தெரியப்படுத்த எனக்கு வாய்ப்பளித்த கிழக்கொளி ஆசிரியர்குழுவிற்கும், தங்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

புதிய முயற்சி

UNITED BOOK CENTRE
யுனைட்டட் புக் சென்டர்
75A, MUNAI STREET, BATTICALOA
☎ 065-22452 Fax:065-25434

கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்சங்க வெளியீடான
'கிழக்கொளி' சஞ்சிகையின்
10வது ஆண்டு நிறைவினையொட்டி
நடாத்தப்படுகின்ற போட்டி I

## சிறுகதைப் போட்டி

விதிகள்:

01. மேற்படி போட்டி பாடசாலையில் கல்வி கற்கும் 9ம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலே கல்வி கற்கும் மாணவர்களுக்குமாக இரு மட்டங்களிலே நடைபெறும். எனினும் போட்டி விதிகள் பொதுவானவைகளாகும்.
02. சிறுகதைக் கரு மற்றவர்களைப் புண்படுத்தாதவிதத்தில் எவ்விடயமாகவும் அமையலாம்.
03. ஆக்கம் 07 பக்கங்களுக்கு மேற்படாததாக அமையவேண்டும்.
04. பிரதி, கணணி அல்லது தட்டச்சு உருவில் அமைவது விரும்பத்தக்கது.
05. முடிவு திகதி : 31.08.2003
06. அனுப்பவேண்டிய முகவரி :
    பிரதம ஆசிரியர்
    கிழக்கொளி
    விநியோகப் பிரிவு
    கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
    வந்தாறுமூலை
07. நடுவரின் தீர்ப்பே இறுதியானது
08. முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
09. ஆறுதல் பரிசாக சான்றிதழ்கள் வழங்கப்படும்

பிரதம ஆசிரியர்,கிழக்கொளி, 23.06.2003